மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 11 சுற்றம் : 1 / சனவரி 2021 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-




## தமிழ் டிவிட்டர் வலதுசாரியா இடதுசாரியா?




அரசியல் வணிகமும் - வணிக அரசியலும்

தூர்தர்ஷன் பொதிகை

## சமற்கிருத செய்தித் திணிப்பு


வலைத் தளத்தில்
வாழ்வியல்
சொல்லும்
களம்...
பாருங்கள்!
முற்றம்
MUTRAM TV
இணைய தொலைக்காட்சி

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly January 2021

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி**
இணை ஆசிரியர்
பேராசிரியர் **அப்பாத்துரை**
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**சைதை மணிமாறன்**
**தமிழரசு** மதுரை
**செபாஸ்டின்** திருச்சி
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**ஆ.சிரோன்மணி**
**முருகன் தேவேந்திரன்**
**ஜான்ஜெனோவா ஜெர்லின்** திருச்சி
**ராஜா சாக்ரட்டீஸ்** தஞ்சை
**அ. இரா. முல்லைக்கோ** பெங்களூர்
நிர்வாகம்
**மணிகண்டன்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**ஆபிரகாம் லிங்கன்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச : 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

# உள்ளே

வாக்கு வேட்டை தொடக்கம் (தலையங்கம்) ....4

நாடகக் கொட்டாய் முதல்
சினிமாக் கொட்டாய் வரை (11)
பூவை தயா.... 5

அமெரிக்கப் பணத்தில் கொழிக்கிறது
ஆர்.எஸ்.எஸ்.... 7

சீன மோசடி.... 11

சொர்க்கத்தில் நீங்கள் ....14

நட்சத்திரம்.... 16

நாட்டை நல்வழிப்படுத்தியவர்கள்.... 17

மோடியின் குடும்பத்தைப் பற்றி தேடி
கண்டடைந்த சில சுவாரஸ்யமான தகவல்கள்.... 21

உண்மையான விதை எண்ணெய் ....22

இந்தியாவின் அரசியல்.... 23

காஞ்சி சங்கராச்சியார் ஜெயிலில்
இருந்த போது நடந்தவை.... 24

தமிழ் டிவிட்டர் வலதுசாரியா இடதுசாரியா.... 26

தோள் சீலை புரட்சி அல்லது
குப்பாய புரட்சி
- கிருஷ்ணவேல் ....30

சமற்கிருத செய்தித் திணிப்பு
- கி. வெங்கட்ராமன்.... 33

அரசியல் வணிகமும் - வணிக அரசியலும்.... 34

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. *- ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# வாக்கு வேட்டை தொடக்கம்

தமிழக சட்டமன்றத் தேர்தல் எப்போது என்று தெரியாத நிலையிலேயே தமிழகத்தின் இருபெரும் கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு வாக்கு வேட்டையைத் தொடங்கி விட்டனர். மற்ற கட்சிகளும் அவ்வழியை பின்தொடரத் தொடங்கியிருக்கின்றன. ரஜினி என்ற சலசலப்பு ஓய்ந்துவிட்டது. கூட்டணிகள் எப்படி அமையும்? வருமான வரித்துறை, அமலாக்கத் துறை என்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, நடுவண் அரசு யார் யாரை சிறைக்குள் தள்ளும் என்று, ஊடகங்கள் உள்பட தனிப்பட்ட நபர்களும் தத்தமது கற்பனைக் குதிரைகளைத் தட்டிவிடத் தொடங்கி விட்டனர்.

சசிகலா அவர்கள் சிறைவாழ்வை முடித்துக் கொண்டு வர இருக்கிறார். அவர் வந்தபின் மிகப்பெரும் மாற்றங்கள் ஏற்படும் என்று பலரும் கூறுகின்றனர். இதற்கிடையில் மு.க.அழகிரி அவர்கள் ஒரு பாதையைத் தேர்ந்தெடுக்க உள்ளார் என்ற செய்திகளும் வருகின்றன. ஆக, எல்லாத் தேர்தல்களையும் போல் 2021 தேர்தலும் பல சுவைகள் நிரம்பிய தேர்தலாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

நடந்த தேர்தல்களில் குறைந்த அளவே வாக்குகள் பெற்றிருந்த பாசக, தனது அதிகாரப் பலத்தைக் கொண்டு, தகுதிக்கும் அதிகமான இடங்களை கூட்டணியில் பெறுவதற்கான எல்லா வேலைகளையும் செய்து வருகிறது. கூட்டணிக்குள்ளேயே மாறுபட்ட கருத்துகளை அடிக்கடி வெளியிட்டுக் கொண்டும் இருக்கிறது. தமிழ்நாட்டிற்குள் பாசக வர முடியாது என்று கருத்து சொல்கிறவர்ளும்கூட, பாசக தனது அதிகாரத்தின் வழியாக சில இடங்களைப் பெற்று விடுமோ என்று ஐயப்படத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால், வளர்ந்து கொண்டிருப்பதாக நினைக்க வைக்கும் பாசக, தற்போது சேர்ந்திருக்கிற உறுப்பினர்கள் அனைவரும் நமக்குத்தான் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கையை வைத்திருக்கவில்லை. அதிகாரத்திற் காகவும், செல்வாக்கிற்காகவும், பணத்திற்காகவும் பாசகவில் இணைந்திருக்கிறவர்கள், தேர்தல் என்று வரும்போது, தத்தமது மனச்சான்றின்படி தங்களுக்குப் பிடித்தவர்களுக்கு, பிடித்த கட்சிகளுக்கு வாக்களித்து விடுவார்களோ என்ற அச்ச உணர்வு பலகாலமாக கட்சியில் இருப்பவர்களுக்கு வரத் தொடங்கியுள்ளதாக கூறப் படுகிறது.

எல்லாத்துறைகளிலும் வெளிநாடுகளைப் பின்பற்றி முன்னேறத் துடிக்கும் மோடி அரசு ஏனோ, வெளி நாடுகளைப் போல், வாக்குச் சீட்டு முறையை மட்டும் நடைமுறைப்படுத்த மறுக்கிறது. மற்ற எதிர்க் கட்சிகளும் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாதது போல் இருக்கிறது. எதுவும் உள் ஒப்பந்தங்களை ஆளும் கட்சியும் எதிர்க்கட்சிகளும் போட்டிருக்கின்றனவா என்பதும் மருமமாக உள்ளது. ஓட்டுப் பதிவு இயந்திரத் தில் பல தில்லுமுல்லுகளைச் செய்யலாம் என்று கூறப்படுகிற போது, அதை நீக்கி விட்டு, வாக்குச் சீட்டு களைப் பயன்படுத்துவதில் எதற்கு தேர்தல் ஆணையத் திற்கு தயக்கம்?





# நாடகக் கொட்டாய் முதல்... சினிமாக் கொட்டாய் வரை!

# 11



## 'ஜெகஜால கில்லாடிகள்'

பூவை தயா

எனது நண்பவர் ஒருவர் வரலாற்று நாடகம் ஒன்றைப் போடப் போவதாகக் கூறினார். அந்நாடகத்தை எழுதியவர் மிகச்சிறந்த நாடக ஆசிரியர், அனுபவமிக்கவர். அவர் எழுதிய அந்த 'ஸ்கிரிப்டை' என்னிடம் கொடுத்து படித்துப் பார்த்து அபிப்பிராயம் சொல்லச் சொன்னார். நான் தயங்கினேன். அது நாகரீகமற்ற செயல் என்று கூறினேன். நண்பர் ஏற்க வில்லை, வற்புறுத்தினார். நண்பரின் வேண்டுகோளுக் காய்ப் படித்தேன். மொத்தமே நாற்பது பக்கம்தான். இதை நாடகமாய் நடத்தினால் 45 நிமிடங்கள் ஓட்டலாம் அவ்வளவுதான். ஆனால், சொல்லப்பட்ட வரலாற்றில் முழுக்க முழுக்க உண்மை இருந்தது. தெளிவாகவும் சொல்லப்பட்டிருந்தது. ஆயினும் வெறும் உண்மையைச் சொல்லி மட்டும் ரசிகர்களைக் கவர முடியாது. கதையை வளர்க்க சில கற்பனைக் கதா பாத்திரங்கள் தேவை. அவர்கள் மூலம் சுவாரஸ்யமான சில காட்சிகளைப் படைத்திருக்கலாம்.

இந்த வகையில் நான் முற்றிலும் மாறுபட்டவன். ஒரு வரலாற்று நாடகம் எழுதுகிறேன் என்றால் அதில் அந்த வரலாற்று நாயகர்கள் சிதைக்கப்படாமல், பிற கலப்பு கதாபாத்திரங்களும் சமபங்கு இருக்கும். உண்மை நிரந்தரமென்றாலும், பொய்க்குக் கிடைக்கும் வரவேற்பு மிக அதிகம். நாளடைவில் அந்துப் பொய்யே நிரந்தரமாகி விடும் கேவல நிலை நம் நாட்டில் அதிக அளவில் பெருகிவிட்டது. இன்றைய வரலாற்று நூல்களில் உண்மையென்பது மிகவும் குறைந்துவிட்டது. வேறு வழியில்லை. அவர்களும் வாழ வேண்டாமா? சுத்தமான தங்மென்றாலும் அதில் இன்னாரு உலோகம் கலந்த பின்தான் அழகான உருவம் கிடைக்கிறது. ஆக ஒரு உண்மையோடு போலியைச் சேர்க்க வேண்டிய கட்டாயத்தில் நாம் எல்லோரும் தள்ளப்பட்டிருக் கிறோம்.

இந்த நிலையில் என் மனதில் ஒரு எண்ணம் தோன்றியது. பொய், பித்தலாட்டம், ஆள்மாறாட்டம் இவைகளை மையமாக வைத்து ஒரு நகைச்சுவை நாடகம் எழுதலாமே என்று... எழுதத் துவங்கினேன்... எழுதியும் முடித்தேன். இதில் ஒரு ஆச்சரியம் என்னவென்றால்... இதற்கு முன் நான் எழுதிய எந்த நாடகத்தையும் இத்தனை சீக்கிரமாய் எழுதவில்லை. இது எப்படி சாத்தியமாயிற்று? பொய்யும் புரட்டும் நமது இரத்ததில் நிறையவே கலந்திருப்பதால் தங்க தடையின்றி எழுத முடிந்ததோ என்று எனக்குள் ஒரு கேள்வி? அது உண்மையாகக்கூட இருக்கலாம் அல்லவா?

எது எப்படியோ... எனது எழுதில் உருவான நாடகங்களில் 'ஜெகஜால கிலல்லாடி'க்கு பெரும் சிறப்பும் வரலாறும் கிடைக்கப் பெற்றேன். இந்நாடகத்தில் நான்கு நாயகர்கள். இரண்டு நாயகிகள், நாயகியின் அப்பா, நாயகி வீட்டு வேலைக்காரன், ஒரு மானேஜர் ஆக மொத்தம் ஒன்பது கதாபாத்திரங்கள். சென்னையில் தந்தையுடன் வசிக்கும் அக்காள் தங்கையான இருவரும் அதே வீட்டிலிருந்து வரும் முறை மாமன்களான அண்ணன் தம்பிகளை மணந்து கொள்ள விரும்பவில்லை. மாறாக சிங்கப்பூரில் இருக்கும் அண்ணன் தம்பியான மாமனையே மணந்து கொள்ளப் பிரியப்படுகிறார்கள். ஆனால், இதுவரை சிங்கப்பூர் நாயகர்களை அவர்கள் பார்த்ததே இல்லை. சென்னையிலிருக்கும் அண்ணன் தம்பிகள் இப்பெண்களை மணப்பதால் இருவருக்கும் பலகோடி ரூபாய் சொத்துக்கள் கிடைக்கும். இந்தச் சொத்து நம் கைவிட்டுப் போகக்கூடாதென்றால், அடுத்த மாதம் வரவிருக்கும் சிங்கப்பூர் மாப்பிள்ளைகள் சென்னைக்குள்ளே வரக்கூடாதென திட்டம் தீட்டு கிறார்கள். தீயவர்களின் திட்டங்கள், செயல்களுக்கு உடனே வழி கிடைத்துவிடுவதைப் போல்... இவர் களுக்கும் ஒரு வழி கிடைத்தது.

சென்னையில் உள்ள இருவரைப் பிடித்து வந்து இவர்தான் சிங்கப்பூர் மாப்பிள்ளை என்று சொல்வோம். அவர்களுக்கு முன்னமே திருமணம் ஆகிவிட்டது என்பதை அவர்கள் வாயாலேயே சொல்ல வைப்போம்

என்று செயலில் இறங்கினார்கள். வெற்றி பெற்றார்களா என்பதே கதை. இந்நாடகத்தில் நானும் பாபுவும் முதல் அரங்கேற்றத்தில் நடித்தோம். அதன்பிறகு என் தம்பியாக ஜோடி சேர்ந்தது மதுரை கண்ணன். மற்ற இரு நாயகர் களாக மல்லிக்ராஜ், ஆர்.டி.ராஜேந்தர், உதயகுமார், இறுதிக்கட்டத்தில் நடிகர் உதயா, பலமேடைகளில் நான்காவது நாயகனாக நடித்தார். வீட்டு வேலைக் காரனாகவும், அதிகாரம் கொண்டவனாகவும் எனது தம்பி பூவை.செ.ரவி நடித்தார். மேலும் இரண்டு துணை கதாபாத்திரங்களில் ஜி.எம்.சுதர்ஸன், இயக்குனர் கே.எஸ்.பழனி, தன்ராஜ் ஆகியோரும் நடித்தனர். அப்பா வேடத்தில் அமானுல்லா நடித்தார். நடிகைகள் என்று எடுத்துக் கொண்டால் மூன்று பேரைத் தவிர மற்றவர்களும் நடித்துக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் ஸ்ரீமதி, மாலா, பவானி, முல்லைமலர், ஸ்ரீலட்சுமி, சுபா, திலகா, அருள். இந்த நாடகத்திலிருந்து ஒப்பனையையும் நானே செய்ய ஆரம்பித்தேன் நடிகைகளின் உதவியுடன். அதன்பின்னர் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்று, உதவிய நடிகைகளுக்கே நான் ஒப்பனை செய்தேன். இது காலத்தில் வளர்ச்சியல்ல, அந்த ஒப்பனையை முழு ஈடுபாட்டுடன் கற்றுக் கொண்டேன் நான் என்பதே உண்மை.

பல ஒத்திகைளுக்குப்பின் 1984இல் என்று நினைக்கிறேன், தி.நகர் வாணிமகாலில் அரங்கேற்றம். மாலை 5.00 மணிக்கே ஓரளவிற்கு கூட்டம் சேர்ந்தது. அதன்பின்னர் 6.00 மணியளவில் பெருங்கூட்டம் கூடி விட்டது. எனக்கும் சக நடிகர்களுக்கும் என்ன செய்வதென்றே புரியவில்லை. அச்சமயம் வாணிமகால் மேனேஜர் என்னை அழைத்திருந்தார். போனேன், வணக்கம் வைத்தேன். “வணக்கத்தை விடு பூவைதயா, நான் என்ன சொன்னேன், தியேட்டர் கெப்பாசிட்டியே 800 சீட்டுதான். வந்திருக்கிறது 1000 பேருக்கு மேலேயே இருக்கும் போலிருக்கே. இப்ப என்ன செய்யப் போறே?“ என்றார். நான் இதை எதிர்பார்க்கல சார். ஆனாலும் வந்திருக்கிற அத்தனை பேரும் ரொம்ப வேண்டியவுங்க. நின்னுக்கிட்டே பாருங்கன்னு சொன்னாலும் ஒத்துப் பாங்க சார் என்றேன். “என்னமோ பண்ணு, அடுத்த முறை உனக்கு தியேட்டர் குடுக்க மாட்டேன். குடுத்தா லும் கண்டிசன் நிறையா இருக்கும்“ என்று கூறிப் போய்விட்டார். அதன்பிறகு நான் சக நடிகர்களையும் அழைத்து அவரவர் குடும்பத்துடன் பேசச் சொல்லி கொஞ்சம் ‘அட்ஜஸ்ட்’ செய்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டேன். மாலை 6.15க்கு பூஜை போட்டு 6.30க்கு நாடகத்தைத் தொடங்கிவிட்டோம். இரண்டே முக்கால் மணிநேரம் நாடகம். கலகலப்பாக நடந்து முடிந்தது. பார்த்தவர்களின் பாராட்டு மழையில் நனைந்தோம். நடிப்பில் ஒருவர் கூட சோடை போகவில்லை. எல்லோரும் அருமையாக நடித்தார்கள் என்றது ஒரு கூட்டம்.

ஒரே ஒருவர் மட்டும் என்னைத் தனியாகச் சந்தித்து, “தயா, நாடகத்தை ஒரு இருபது நிமிடம் குறைக்க முடியுமான்னு பாருங்க, மத்தபடி நாடகம் சாரியான காமெடி“ என்றார். உண்மைதான் நல்ல காமெடியாக அமைந்துவிட்டது. அதிலும் முதல் காட்சி நீதிமன்றம் குற்றவாளிக் கூண்டிலே எனை நிறுத்தி, நான் எழுதிய ஜெகஜால கில்லாடிகள் என்ற நாடகம் ஏற்கனவே சினிமாவாகவும் நாடகமாகவும் ஆயிரம் வந்திருக்கிறது என்பதுதான் என்மேல் சமத்தப்பட்ட குற்றச்சாட்டு, நான் அவர்களை, ஆயிரம்முறை ஒரே கதை வரும்பவரை ஏன் விட்டு வைத்தீர்கள், அப்போதே வழக்குப் போட்டிருக்கலாமே என்று கேட்டு, ஆயிரத்து ஒன்றாக இதுவும் இருப்பதில் உங்களுக்கென்ன சிரமம்? என்று கேட்பேன். “வாதியின் கேள்வியில் நியாயம் இருப்பதால் இந்த கேஸை டிஸ்மிஸ் செய்கிறேன் என்பார் நீதிபதி. இந்த முதல் காட்சி எல்லோராலும் பாராட்டப்பட்டது. அதன் பின்னர் இந்த நாடகத்தை இருபது நிமிடம் குறைத்து, இடைவேளைக் காட்சியை ‘க்ளைமாக்ஸ்’ காட்சியாக மாற்றியதில் கதையில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. நண்பர்களின் கடும் முயற்சியால் கோவில் திருவிழக்கள், சபாக்கள் என்று நாடகம் 100ஆவது காட்சியை நெருங்கியது.

மதுரை கண்ணன், நடிகர் உதயா, மல்லிக்ராஜ் ஆகியோரின் கடின ஏற்பாட்டில் சென்னை கலை வாணர் அரங்கில், இயக்குனர் டி.பி.கஜேந்திரன், ஐசரி கணேஷ் மற்றும் திரைப்பட முன்னணிக் கலைஞர்கள் சிறப்பிக்க 100ஆவது நாடக விழா சிறப்பாக நடந்தே றியது. அதற்குப்பின்னும் ஒரு பத்து நாடகம் நடத்தி னோம். இந்த நிலையில் டி.விக்களில் மெகா சிரியல்களின் ஆதிக்கம் வளர வளர, எங்களது இந்த நாடகத்தின் வீரியம் குறையத் தொடங்கியது. இந்த நாடகம் தொடங்கி இருபதாண்டுகள் கடந்து இறுதியாக சென்னை இராணிசீதை மன்றத்தில் ஒரு சபாவின் மூலமாக வாய்ப்புக் கிடைத்தது.

எப்போதும் போல் யாவரும் உற்சாகமாய் ஒப்பனைகளை முடித்து காத்திருந்தோம். 7.00 மணிக்கு நாடகம் ஆரம்பிக்க வேண்டும். ஏழு மணியும் ஆனது, ஆனால் மக்கள் ஒருவர்கூட அரங்க இருக்கையில் இல்லை. ஒப்பனை செய்து கொண்டிருந்த நேரம் ஒரு நான்கைந்து பேர் வெளி ஆட்கள் வந்தார்கள். அவர்களும் நடிகைகளிடம் பேசிவிட்டு வெளியே சென்று விட்டார்கள். சபா மெம்பர்கள்கூட ஒருவரும் வரவில்லை. வெறும் இருக்கைகளைப் பார்த்துப் பேசுவது கொடுமையான ஒன்று. ஆகவே நாடகத்தை நிறுத்திவிட்டோம். இதே இந்த நாடகம் அரங்கேற் றத்தின்போது இருக்கவும் இடம் இல்லாமல் நிற்கவும் இடம் இல்லாமல் இருந்ததை நினைத்துப் பார்க்கையில் ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது. நாடகத்தின் மீது பற்றுதலுடனும் ஈடுபாட்டுடனும் இருந்து வரும் கலைஞர்களை எந்தச் சக்தியாலும் பிரிக்க முடியாது என்பதை எல்லாக் கலைஞர்களும் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்களில் நாங்களும் அடங்குவோம். எங்களுக்கெல்லாம் (நாடகக்) கலைத்துறையே தெய்வம்.

**பயணம் தொடரும்...**

# அமெரிக்கப் பணத்தில் கொழிக்கிறது ஆர்.எஸ்.எஸ்.

இந்திய வளர்ச்சி மற்றும் புனர் வாழ்வு நிதியம் (India Development and Relief Fund - IDRF) என்ற ஒரு அமைப்பு அமெரிக்காவில் 1989 இல் பதிவு செய்யப்பட்டது. அந்நாட்டு வரிச் சலுகைக்கான சட்டம் 501(2) (3) பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட இந்த நிறுவனத்தின் நோக்கமாக, இந்தியாவின் கிராம வளர்ச்சி, பழங்குடியினர் நலம் மற்றும் நகர்ப்புற ஏழைகள் நலன் என்பவை நிர்ணயிக் கப்பட்டன. 2000த்தில் இந்த நிறுவனம் திரட்டிய தொகை 3.8 மில்லியன் அமெரிக்க டாலர், வினியோகிக் கப் பட்டுள்ளது. 'அவுட்லுக்' வார இதழ் (ஜூலை 22, 2002) வெளியிட்ட ஒரு கட்டுரையில், இந்த நிறுவனத் துக்கும் சங் பரிவார் அமைப்புகளுக்கும் உள்ள தொடர் புகளை அம்பலமாக்கியிருந்தது. உடனே அய்.டி.ஆர்.எப்., இந்த செய்தியைத் திட்டவட்டமாக மறுத்தது. தங்களுக்கும் எந்த 'இசத்துக்கும்', தத்துவத்துக்கும், கட்சிகளுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்று அந்த மறுப்பு அறிக்கை கூறியது. ஆனால், ஆவணங் களைத் துல்லியமாக பரிசீலித்துப் பார்க்கும்போது, அய்.டி.டி.ஆர்.எப்.க்கும், சங்பரிவார்களுக்கும் உள்ள நெருக்கமான தொடர்புகள் திட்டவட்டமாகத் தெரி கின்றன. அதற்கான ஆதாரங்கள் கீழே தரப்படுகின்றன.

அய்டிஆர்.எப். நிறுவனம் அமெரிக்காவின் பல்வேறு மாநில அரசுகளிடம், தங்களுக்கு, வரிச் சலுகைக்கான சான்றிதழ் கோரி மனுத் தாக்கல் செய்துள்ளது. அதற்கு 'படிவம் 1023' என்று பெயர். அதில், இந்தியாவில் கீழ்க்கண்ட 9 முக்கிய நிறுவனங்கள், இந்தியாவில் தங் களின் பிரதிநிதிகளாக செயல்படுவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

**விகார் பாரதி (பீகார்)**

சுவாமி விவேகானந்தா கிராம வளர்ச்சிக் கழகம் (தமிழ்நாடு)

சேவா பாரதி (டெல்லி)

ஜனசேவா வித்யா கேந்திரா (கருநாடகம்)

வனவாசி கல்யாண் ஆஸ்ரம் (ம.பி.)

வனவாசி கல்யாண் ஆஸ்ரம் (குஜராத்)

வனவாசி கல்யாண் ஆஸ்ரம் (நாகர் ஹவேலி)

கிரிவாரி வனவாசி சேவா டிரஸ்ட் (உ.பி.)

ஜி.தேஷ்பாண்டே வனவாசி வஸ்திகிரா (மகாராஷ்டிரா)

மேற்குறிப்பிட்ட 9 நிறுவனங்களுமே சங் பரிவார் அமைப்புகள்தான். இதை ஆர்.எஸ்.எஸ். நடத்தும் இணையத்தளங்களிலே காண முடியும். உதாரணமாக விகாஸ் பாரதி, சங் நீரூற்றிலிருந்து கிளம்பிய நீரோட்டம் என்றும், விவேகானந்தா கிராம வளர்ச்சிக் கழகம்,



தமிழ்நாட்டில் விசுவ இந்து பரிஷத்தின் தோழமை அமைப்பு என்றும், ஆர்.எஸ்.எஸ். இணைய தளங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்புகளின் கீழ் 67 துணை அமைப்புகள் இந்தியாவில் செயல்படுவதாகவும், அய்.டி.ஆர்.எப்., அறிவித்திருக்கிறது. ஆக மொத்த முள்ள 75 நிறுவனங் களில், 60 நிறுவனங்கள் சங் பரிவார்களோடு தொடர் புள்ள நிறுவனங்களாகும்.

அந்த நிறுவனங்களில் பதிவாகியுள்ள அய்டிஆர்.எப். நிறுவனங்களின் பொறுப்பாளர்கள் பலரும் ஆர்.எஸ். எஸ்.காரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆர்.எஸ்.எஸ். சுக்கு நிகராக இந்து சேவக் சங் (எச்.எஸ்.எஸ்.) என்ற அமைப்பை அமெரிக்காவில் நடத்தி வருகிறார்கள். பீஷ்ம அக்னி ஹோத்ரி, ஜெதீந்தர் குமார், ராம்ஜெஹானி, வினோத் பிரகாஷ் ஆகிய ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர் கள்தான் அமெரிக்காவில் நடத்தி வருகிறார்கள். பீஷ்ம அக்னி ஹோத்ரி, ஜெதீந்தர் குமார், ராம்ஜெஹானி, வினோத் பிரகாஷ் ஆகிய ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் தான் அமெரிக்காவில் அய்.டி.ஆர்.எப். நிறுவனர்கள். இவர்கள் அமெரிக்காவின் ஆர்.எஸ்.எஸ்.சான எச்.எஸ்.எஸ். பொறுப்பாளர்களாகவும் செயல்படு கிறார்கள். அய்.டி.ஆர்.எப்.பின் பொதுச் செயலாளராக இருக்கம் ஷியாம் கோகல் காந்தி என்பவர் சான் பிரான்சிஸ்கோவில் எச்.எஸ்.எஸ். பொறுப்பாளர். அய்.டி.ஆர்.எப்.பின் ஆலோசகராக இந்தியாவில் செயல்படுபவர் ஷியாம் பாரன்டே எனும் பார்ப்பனர். இவர்தான், வெளிநாடுகளில் சங் பரிவார் நடவடிக்கை களுக்கான அமைப்பாளர் ஆர்.எஸ்.எஸ்.சின் ‘அப்சர்வர்’ பத்திரிகையில் இது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க வாழ் பார்ப்பனர்கள் 1980களிலிருந்து ‘இந்துத்துவா’ வைத் தீவிரப்படுத்தும் முயற்சிகளில் இறங்கினர். இந்தியாவிலிருந்து 1990களில் அமெரிக்கா வுக்கு குடியேறிய ஏராளமான பார்ப்பனர்கள், இதில் தீவிரம் காட்டினர். குறிப்பாக, அமெரிக்காவின் மேற்கு கடற்கரை, வடக்குகிழக்கு பகுதிகளிலும், தெற்குப் பகுதி மாநிலங்களான புளோரிடா, டெக்சாஸ் மாநிலங் களிலும், இந்துத்துவா அமைப்புகள் வலிமையாக கால் பதித்தன. இந்த இந்துத்துவா அமைப்புகள், இந்தியாவில் சங் பரிவார்களுக்குத் துணை நிற்பதோடு அய்டிஆர்.எப். வழியாக, பெருமளவு நன்கொடைகளைத் திரட்டித் தந்து வருகின்றன.

மத வேறுபாடு இல்லாமல் இந்தியர்களின் வளர்ச்சிக்கு உதவக் கூடிய இந்திய வளர்ச்சி (எய்டு) அமைப்பு, குழந்தைகள் மறுவாழ்வு (கிரஸ்), இந்திய வளர்ச்சிக் கழகம் (அய்டிஎல்.) போன்ற பல பொதுவான தொண்டு நிறுவனங்கள் அமெரிக்காவில் செயல் பட்டாலும், அய்டிஆர்.எப்., இவைகளை அங்கீகரிப்பது இல்லை. சங் பரிவார் களுடன் தொடர்புடைய அமைப்புகளை மட்டுமே சேவை நிறுவனங்களாக அது அங்கீகரிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமியர்களை தீவிரவாதிகளாக சித்தரிகவும் , இந்திய முஸ்லிம்கள், சர்வதேச முஸ்லிம் பயங்கரவாதி களுடன் தொடர்பு கொண்டிப்பதாகவும், குறும் படங் களைத் தயாரித்து, திரையிட்டு நிதி திரட்டும் வேலைகளை அமெரிக்க ஆர்.எஸ்.எஸ்.சான எச்.எஸ். எஸ்.சும், அய்.டிஆர்.எப்.பும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

### நிதி ஒதுக்கீடு : எதற்கு?

‘வளர்ச்சி’, ‘புனர்வாழ்வு’ என்ற பெயரில் இந்தியாவுக்கு அய்.டி.ஆர்.எப். அனுப்பிய தொகையில் பெரும் பகுதி, சங் பரிவார்களின் திட்டங்களை அமல்படுத்துவதற்கும் மதப் பகைமையை வளர்ப்பதற்குமே பயன்பட்டிருக்கிறது என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

1994 முதல் 2000 வரை அய்டிஆர்.எப். இந்தியாவுக்கு அனுப்பிய தொகையில் 75 சதவீதம் (3.2 மில்லியன் டாலர்), ஆர்.எஸ்.எஸ். ஆதரவு அமைப்புகளுக்கே அனுப்பப்பட்டுள்ளது. எந்த ஒரு மைனாரிட்டி அமைப்புகளுக்கும் உதவிடவில்லை. அனுப்பிய தொகையில் 70 சதவீதம் ஆதிவாசிகளை, இந்து மதத்துக்கு மாற்றவும், அதற்குத் தயார் செய்வதற்கான கல்வி, விடுதிகளை நடத்தவுமே செலவிடப்பட்டு இருக்கிறது. 8 சதவீதம் மருத்துவத்துக்கும், 15 சதவீதம் புனர்வாழ்வுத் திட்டங்களுக்கும், 4 சதவீதம் கிராம வளர்ச்சிக்கும் செலவிடப்பட்டு இருக்கிறது. (ஆதாரம்: அய்.டி.ஆர்.எப். ஆண்டறிக்கை இணையதளத்தி லிருந்து) ‘புனர் வாழ்வுப்பணி’ என்ற பெயரில் செலவிடப் பட்ட தொகைகூட மத அடிப்படையிலேயே செலவிடப் பட்டிருக்கிறது. குஜராத் பூகம்பத்தின்போது புனர் வாழ்வு நிதியிலிருந்து செலவிட்ட தொகையை, பாதிக்கப் பட்ட இந்துக்களுக்கு மட்டுமே ஒதுக்கினார்கள். இதேபோல் மதக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட வங்க தேச இந்துக்கள், ராணுவம் மற்றும் போராளிகள் தாக்குதலுக்குள்ளான காஷ்மீர் இந்துக்கள் என்று இந்துக்களுக்கு மட்டுமே, இந்நிறுவனம் உதவிகளைச் செய்துள்ளது. இவைகளில் பாதிக்கப்பட்டவர்கள் கிறித்தவர், முஸ்லிம்கள் இருந்தாலும்கூட ‘நிவாரண உதவிகள்’ மதத்தின் அடிப்படையிலேயே செய்யப் பட்டன.

குஜராத் பூகம்பத்தின்போது ஆர்.எஸ்.எஸ்., சங் பரிவார் அமைப்புகள், பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் பகுதியைப் புறக்கணித்தன என்று குல்தீப் நய்யார் எழுதினார். (பைனான்சியல் எக்ஸ்பிரஸ், பிப்.21, 2001) இந்து அல்லாத தொண்டு நிறுவனங்கள், நிவாரணப் பணியில் ஈடுபட வந்தபோது, சங் பரிவார் அமைப்புகள் அவைகளைத் தடுத்து நிறுத்திவிட்டன. (கிறிஸ்டியன் சயின்ஸ் மானிட்டர், ஜன.31, 2001)

### ஆதிவாசிகள் மதமாற்றம்

இந்தியாவின் பழங்குடி மக்களை ஆதிவாசிகள் என்ற பெயரில் தான் அழைப்பது வழக்கம்; ஆனால்,

இந்தியாவின் பூர்வீகக் குடிகள் ஆரியர்கள்தான் என்று வரலாற்றைப் புரட்ட விரும்பும் 'சங் பரிவாரங்கள்' இவர்களை ஆதிவாசிகள் அதாவது பூர்வீகக் குடிகள் என்று அழைப்பதில்லை. மாறாக 'வனவாசிகள்' என்று அழைக்கிறார்கள். பழங்குடியினரான ஆதிவாசிகள், இயற்கையை வழிபடக் கூடியவர்கள். அவர்கள் இந்துக்கள் அல்ல. இந்து சாதி அமைப்பால் கடந்த நூற்றாண்டில் பாதிக்கப்பட்டவர்கள். இவர்கள் மீது மதங்கள் திணிக்கப்பட்டன. பலர் கிறிஸ்தவர்களா னார்கள். அண்மைக்காலமாக, இந்த மக்களை 'இந்துக்களாக' மாற்றும் முயற்சிகளில் சங்பரிவார் தீவிரம் காட்டி செயல்பட்டு வருகிறது. அதன் காரணமாக பழங்குடியினருக்கான கல்வித் திட்டங்களையும், நல் வாழ்வுத் திட்டங்களையும் அமல்படுத்தி வருகிறது. இதற்கான பெரும் நிதி அய்.டி.ஆர்.எப். போன்ற அமெரிக்க நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகிறது.

பழங்குடியினரை இந்து மதமாற்றம் செய்வதற்கே அமெரிக்காவின் பணம் அய்.டி.ஆர்.எப். வழியாகப் பயன்படுத்தப் பட்டுள்ளதற்கு ஏராளமான சான்றுகள் கிடைத்துள்ளன. 'வனவாசி கல்யாண் ஆஸ்ரமம்' என்ற அமைப்புக்கு நிதி உதவி செய்து வருவதாக அய்.டி. ஆர்.எப். ஒப்புக் கொண்டுள்ளதை ஏற்கனவே சுட்டிக் காட்டினோம்."கிறிஸ்தவர்களாக்கப்பட்ட வனவாசி களை இந்த மதத்துக்கு மாற்றுவதற்காகவே வனவாசி கல்யாண் ஆஸ்ரமம் 1950களில் தோற்றுவிக்கப்பட்டது. அந்த வழியில் பழங்குடியினரின் கிறிஸ்தவ மதமாற்றத்தைத் தடுத்து நிறுத்தி, அவர்களை இந்துக் களாக மாற்றுவதில், எங்கள் அமைப்பு வெற்றிகளைக் குவித்து வருகிறது" என்று ஆர்.எஸ்.எஸ். வெளியீடே எழுதியிருக்கிறது. பழங்குடியினரை இந்துக்களாக மாற்றி, தேசிய நீரோட்டத்துக்குக் கொண்டு வந்து, சமூக விரோத, தேச விரோதிகளிடமிருந்து, அவர்களைக் காப்பாற்றியுள்ளதாக, 'வனவாசி கல்யாண் ஆஸ்ர மத்துக்கு' அய்.டி.ஆர்.எப். நிறுவனமே, தனது ஆவணங் களில் புகழாரம் சூட்டி மகிழ்கிறது.

மத பழங்குடியினரை மதம் மாற்றுவதோடு மட்டுமல்ல; அவர்களை 'இந்துராஷ்டிரம்' அமைவதற் கான போராளிகளாகப் பயிற்சி தரும் நடவடிக்கை களையும் மேற்கொள்கிறார்கள்; அதற்கும் அமெரிக்கா வின் பணம் வருகிறது; அமெரிக்காவின் 'அய்.டி.ஆர்.எப்.' பிடமிருந்து நிதி உதவி பெறும் 'சேவா பாரதி' தனது அறிக்கை ஒன்றில் இதை உறுதிப்படுத்துகிறது. பழங்குடி யினரில் சில ஆண்களையும், பெண்களையும் தேர்வு செய்து அயோத்தியில் உள்ள 'ஸ்ரீராமகதா பிராவச்சான்' என்ற ராமாயணப் பயிற்சி மய்யத்துக்கு அனுப்பி சாமியார்களைக் கொண்டு 8 மாத பயிற்சி தந்து, பிறகு அவர்களைக் கிராமங்களுக்கு அனுப்பி பிரச்சாரகர் களாகப் பயன்படுத்துவதாக சேவா பாரதி கூறுகிறது.

இது மட்டுமல்ல, ஆதிவாசிகளை, இந்துக்களாக மதம் மாற்றும் நிகழ்ச்சி, பா.ஜ.க.வின் தேர்தல் வெற்றிக்கும் பயன்படுகிறது என்று, சங் பரிவார் தலைவர்களே கூறுகிறார்கள். பழங்குடியினர் வாழும் பகுதிகளில் "ஏகல் வித்யாலயா" என்ற பள்ளிகள், அமெரிக்க நிதி உதவியோடு நடத்தப்படுகின்றன. பழங்குடியினரை இந்துக்களாக மாற்றுவதில் இந்தப் பள்ளிகள் பெரும் பங்காற்றுகின்றன. இத்தகைய பள்ளிகளைத் தொடங்கிய தன் மூலமே, பீகாருக்குள் தாங்கள் வலிமை பெற முடிந்தது என்றும், பீகாரில் தாங்கள் மேற்கொண்ட இந்த முயற்சி தேர்தலில் பா.ஜ.க.வுக்கு பெரிய வாய்ப்பை உருவாக்கியது என்றும், குஜராத்திலும் அதே சோதனைகளைத் துவங்கி காங்கிரஸ் கோட்டைகளைத் தகர்ப்போம் என்றும் ஜார்கண்ட் பகுதியைச் சார்ந்த விசுவ இந்து பரிஷத் தலைவர் கவுஷிக் பட்டேல் கூறியிருக்கிறார். (ஆதாரம்: 'தி டெலிகிராப்' நாளேடு, ஜூலை 4, 2000)

ஆக, அமெரிக்கப் பணம், மதமாற்றத்துக்கு மட்டுமல்லாமல், பா.ஜ.க.வை ஆட்சியில் அமர்த்துவதற் கும் பயன்படுத்தப்படுகிறது என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

---

**அந்த வழியில் பழங்குடியினரின் கிறிஸ்தவ மதமாற்றத்தைத் தடுத்து நிறுத்தி, அவர்களை இந்துக் களாக மாற்றுவதில், எங்கள் அமைப்பு வெற்றிகளைக் குவித்து வருகிறது" - என்று ஆர்.எஸ்.எஸ்.வெளியீடே எழுதியிருக்கிறது. பழங்குடியினரை இந்துக்களாக மாற்றி, தேசிய நீரோட்டத்துக்குக் கொண்டு வந்து, சமூகவிரோத, தேசவிரோதிகளிடமிருந்து, அவர்களைக் காப்பாற்றியுள்ளதாக, 'வனவாசி கல்யாண் ஆஸ்ர மத்துக்கு' - அய்.டி.ஆர்.எப். நிறுவனமே, தனது ஆவணங்களில் புகழாரம் சூட்டிமகிழ்கிறது.**

**மதக் கலவரங்களை உருவாக்கவும்....**

அமெரிக்காவிலிருந்து சங்பரிவார்களுக்கு வரும் பணம், இந்தியாவில் மதக் கலவரங்களை நடத்துவதற்கும் பயன்படுகிறது என்பதற்கு ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. சுருக்கம் கருதி, அமெரிக்க நிதி உதவியோடு செயல்படும் அமைப்புகள் தந்துள்ள ஒரு சில ஒப்புதல் வாக்கு மூலங்களை மட்டும் சுட்டிக்காட்டலாம். மேற்கு குஜராத்தில் வாகை எனுமிடத்தில் அமெரிக்க உதவியோடு 'வனவாசி கல்யாண் ஆஸ்ரமம்' நடத்தும் பள்ளியில் சிவாஜியின் படத்துக்குக் கீழே, "சிவாஜி மட்டும் இல்லாவிட்டால் நாம் அனைவரும் 'சுன்னத்' செய்யப்பட்டிருப்போம். சிவாஜி தான், நம்மைக் கட்டாய மதமாற்றத்திலிருந்து காப்பாற்றினார்" என்று எழுதப் பட்டிருக்கிறது. கிறிஸ்தவ மதத்தின் முதல் தலைமுறை யினரான அந்த மாணவர்கள் இப்போது 'இந்து'க்களாக மாற்றப்பட்டுள்ளனர். ஒரு இளம் ஆர்.எஸ்.எஸ்.காரர் அந்தப் பள்ளியை நடத்துகிறார். கலவரத்துக்கான வெறியை இதன் மூலம் தூண்டி விடுகிறார்கள் என்று, பள்ளியை நேரில் பார்வையிட்டுத் திரும்பிய வரலாற்று ஆய்வாளர் அஜய்சிங் எழுதியிருக்கிறார். (ஆசியா வீக், மார்ச் 26, 1999)

அமெரிக்க உதவி பெறும் வனவாசி கல்யாண் பரிஷத்தை நடத்தும் சுவாமி அசீமானந்த் என்பவர் ஒரு ஆதிவாசி கூட கிறிஸ்தவராக இருக்கக் கூடாது என்று கூறி, அனைவரையும் இந்துக்களாக்கும் தீவிர வெறுப்புப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார் என்பதை, 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டின் செய்தியாளர் அருண் வர்கீஸ் அம்பலப்படுத்தினார். ('டைம்ஸ் ஆப் இந்தியா' பிப்.11, 1999)

மத்தியப் பிரதேச மாநிலம் ஜாஷ்பூரில் உள்ள வனவாசி கல்யாண் நிறுவனத்தினரால், கிறிஸ்தவ ஆதிவாசிகள் தாக்கப்படுவதையும், மன உளைச்சலுக்கு உள்ளாக்கப்பட்டதையும், பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் கண்டன ஊர்வலம் நடத்தியதையும் ஒரு டாக்கு மென்டரி படமே அம்பலப்படுத்தியது. (Fishers of Men, Docementary by Ranjankanth and Padmavathy Rao, 1997)

அமெரிக்க வாழ் இந்தியரின் உதவியோடு, இந்தியா வில் கலவரங்களும் வெறுப்புகளும் தூண்டி விடப்பட்ட தற்கு இவை சில உதாரணங்கள். அவர்களின் உதவி யோடு நடத்தப்படும் நிறுவனமான வித்யாபாரதி நடத்தும் பள்ளிகளின் பாடத் திட்டங்களில் வரலாறுகள் திருத்தப்பட்டு, இந்து மதவாத உணர்வுகள் தூண்டி விடப்படுவதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

**நிதி பெறும் நிறுவனங்கள்**

அய்.டி.ஆர்.எப். எனும் அமெரிக்கா வாழ் பார்ப் பனர்கள் நடத்தும் நிறுவனத்திடமிருந்து நிதி உதவி பெறும் நிறுவனங்களின் எண்ணிக்கை 184, மாநில வாரியாக நிதி பெறும் நிறுவனங்களின் பெயர்களையும் நிதியையும், அதன் இணைய தளங்களில் காண முடி கிறது. இதில் தமிழ்நாட்டில் நிதி உதவி பெறும் நிறுவ னங்களையும் பெற்றுள்ள தொகையையும் மட்டும் கீழே தருகிறோம்:

பாரத் கல்சுரல் டிரஸ்ட் திருச்சி (45,980 டாலர் மதத்துக்காக)

கிராமகோயில் பூசாரிகள் பேரவை சென்னை (2,250 டாலர் மதத்துக்காக)

நவஜோதி சாரிட்டி டிரஸ்ட் சென்னை (2,250 டாலர் மதத்துக்காக)

சிவாலயா சென்னை (6,650 டாலர் மதம்கல்வி)

ஸ்ரீராம தனுஷ்கோடி அபய ஆஞ்சநேயர் சேவா டிரஸ்ட் (9,500 டாலர் மதத்துக்காக)

சாமி விவேகானந்தா ரூரல் டெவலப்மென்ட் சொசைட்டி (82,290 டாலர் மதம்கல்விக்காக)

ஆயுர்வேதிக் டிரஸ்ட் (கோவை) (2,410 டாலர் மதம்சமூக நலனுக்காக)

யுனிக் பவுண்டேன் டிரஸ்ட் (திருவண்ணாமலை) (9,035 டாலர் மதம்சமூக நலனுக்காக)

வெர்சல் சாரிட்டபிள் டிரஸ்ட் (சென்னை) (17,500 டாலர்)

விவேகானந்தா கேந்திரா ராக் மெமோரியல் (கன்னியாகுமரி) (74,885 டாலர் மதம் சமூக கல்விக்காக)

ஆரோவில் ஆரோவில் லேண்ட் பன்ட் 301,420 டாலர்.

அர்பிந்தோ ஆக்ஷன் 4,750 டாலர்

ஆர்டார்தோ ஆஸ்ரம் 2,500 டாலர்.

அமெரிக்காவின் அய்.டி.ஆர்.எப். வழங்கியுள்ள மொத்த நிதியில்

82.4 சதவீதம் (2,684,915 டாலர்) சங் பரிவார் அமைப்புகளுக்கும்,

8.1.சதவீதம் (2,64,660 டாலர்) மத நடவடிக்கைகளுக்கும்,

2.2 சதவீதம் (70,620 டாலர்) மதச்சார்பற்ற நடவடிக்கைகளுக்கும்,

7.4 (2,49,785 டாலர்) சதவீதம் 'தெரியாத நடவடிக் கைகளுக்காகவும்' ஒதுக்கப்பட்டுள்ளது.

மதநடவடிக்கைகள், கல்விப் பணிகள், நிவாரணப் பணிகள் என்றபெயரில் வாங்கப்பட்ட நிதியும், சங் பரிவாரங்களின் வளர்ச்சிக்கே பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(Sabarang Communication/SACW/ தளத்திலிருந்து)

# சீன மோசடி!

கொரோனா பரவல் தீவிரமாக இருந்த கால கட்டத்தல், ஊரடங்கு கடுமையாக கடைபிடிக்கப் பட்டது. இதனால் சிறுதொழில் முதல் பெரிய வணிக நிறுவனங்கள் வரை பொருளாதார இழப்பை சந்தித்தன. தனியார் நிறுவனங்களில் வேலையிழப்புகள் அதிகரித் தன. வேலையிழந்தவர்கள் பணத்தேவைக்காவும், குடும்பத்தை நடத்தவும் கடன் வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இந்தச் சூழ்நிலையை தங்களுக்கு சாதக மாக பயன்படுத்திக் கொண்டு, ஆன்லைனில் கடன் செயலியை பதிவேற்றம் செய்து உடனடியாக கடன் பெறலா என்று கவர்ச்சி விளம்பரங்களை இணைய தளங்களில் சில நபர்கள் வெளியிட்டனர்.

இதையடுத்து பல்வேறு பெயர்களில் இயங்கும் இந்தச் செயலிகளை பலரும் பதிவேற்றம் செய்து கடன் பெற்று வந்தனர். ஆனால் கந்துவட்டி கொடுமையைவிட ஆன்லைன் கடன் வட்டிக் கொடுமை அதிகமானது. செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தை அடுத்த பழையனூர் கிராமத்தைச் சேர்ந்த விவேக்(27) என்பவர் தனது தந்தையின் மருத்துவச் செலவுக்காக ஆன்லைன் கடன் செயலி மூலம் ரூபாய் நான்காயிரம் கடன் வாங்கி இருந்தார். ஆனால் குறிப்பிட்ட நாட்களுக்குள் அவரால் கடனைச் செலுத்த முடியாததால், கடன் வழங்கிய நிறுவனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் விவேக்கை ஆபாசமாகத் திட்டி அவமானப்படுத்தினர். இதுதொடர் பான உரையாடல் சமூக வலைத்தளங்களில் வெளியா னது. இதனால் அவமானம் அடைந்த விவேக் தனது கிராமத்தில் உள்ள கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டார். இதுபோன்று ஆன்லைன் கடன் வட்டிக் கொடுமையால் பலர் இன்னல்களுக்கும், மன உளைச்சலுக்கும் அளாகி வருகின்றனர். அவமானம் தாங்க முடியாமல் தற்கொலை முடிவையும் நாடுகின்ற னர்.

இந்த நிலையில் சென்னை வேங்கைவாசலைச் சேர்ந்த கணேசன் என்பவர் போலீஸ் கமிஷனர் மகேஷ்குமார் அகர்வாலை சமீபத்தில் சந்தித்து புகார் மனு ஒன்றை அளித்திருந்தார். அந்தப் புகார் மனுவில் அவர் கூறியிருந்ததாவது:

கொரோனா பரவல் காரணமாக கடந்த மார்ச் மாதம் முதல் வேலையில்லாமல் பணத் தேவைக்காக கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். அப்போது சமூகவலைத்தளங்களில் 'லோன் ஆப்' (கடன் செயலி) மூலம் உடனடி கடன் கிடைக்கும் என்ற விளம்பரத்தைப் பார்த்து 'எம் ரூபி' என்ற செயலியை பதிவிறக்கம் செய்தேன். அப்போது என்னுடைய பான்கார்டு, ஆதார் அட்டை, புகைப்படம் போன்ற விவரங்கள் செயலில்



பதிவு செய்யப்பட்டது. நான் ரூபாய் ஐந்தாயிரம் கடன் வாங்கினேன். இதற்கு ஒரு வாரத்துக்கு ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு வட்டியாகப் பிடித்துக் கொண்டு, ரூபாய் மூன்றாயிரத்து ஐந்நூறு பணத்தை எனது வங்கிக் கணக்கில் போட்டார்கள். ஆனால் அவர்கள் போட்ட நிபந்தனையின்படி என்னால் வட்டி கட்ட முடிய வில்லை. இதனால் 45 வெவ்வேறு செயலிகளில் கடன் பெற்று செலவுக்கும், வட்டி கட்டவும் பயன்படுத்தி வந்தேன். இந்நிலையில் என்னால் ஒரு வாரத்துக்கு வட்டி கட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் ஒரு நாளைக்கு நூறு ரூபாய்க்கு இரண்டு விழுக்காடு வட்டி கட்ட வேண்டும் என்று நிபந்தனை விதித்தார்கள். பின்னர் தினமும் வெவ்வேறு செல்போன் எண்களில் இருந்து என்னைத் தொடர்பு கொண்டு ஆபாசமாகவும்,, அருவெறுக்கத்தக்க வகையிலும் பேசி அவமானப்படுத்து கிறார்கள். அதுமட்டுமின்றி எனது நண்பர்கள், குடும்பத்தினர் எண்களையும் தொடர்புகொண்டு அவமானப்படுத்தி மிரட்டல் விடுக்கிறார்கள். எனவே அதிக வட்டி வசூலிக்கும் ‘கடன் செயலி’யைச் சேர்ந்தவர்கள் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியிருந்தார். மிரட்டல் அழைப்பின் உரையாடல் பதிவுகளையும் புகார் மனுவோடு அவர் கொடுத்திருந்தார்.

இந்தப் புகார் மனு மீது உடனடியாக விசாரணை நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்குமாறு சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசாருக்கு கமிஷனர் மகேஷ் குமார் அகர்வால் உத்தரவிட்டார். அதன் பேரில் மத்திய குற்றப்பிரிவு கூடுதல் கமிஷனர் தேன்மொழி நேரடி மேற்பார்வையில், மத்திய குற்றப்பிரிவு சீட்டு மற்றும் கந்துவட்டி தடுப்புப் பிரிவு போலீசாரும் சைபர் கிரைம் போலீசாரும் இணைந்த புலன் விசாரணையில் களம் இறங்கினார்கள். போலீசாரின் தீவிர விசாரணையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கடன் செயலிகள் கூகுள் பிளே ஸ்டோரில் இருப்பதும் அவற்றில் பெரும்பாலான செயலிகள் பெங்களூருவை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுவதும் தெரிய வந்தது.

புகார்தாரர் கணேசனுக்கு வந்த மிரட்டல் அழைப்புகள் பெங்களூருவில் ‘ட்ரூ கிண்டில் டெக்னாலஜி பிரைவேட் நிறுவனம்’ என்ற பெயரில் இயங்கி வரும் கால்சென்டரில் இருந்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து மத்திய குற்றப்பிரிவு தனிப்படை போலீசார் பெங்களூரு விரைந்தனர். அந்த கால்சென்டரில் அதிரடியாக சோதனை நடத்தினர்.

அப்போது அங்கு 110 பேர்கள் பணி புரிவதும் பெங்களூரு சவுத் இந்திரா நகர் துப்பனஹல்லி பகுதியைச் சேர்ந்த பிரமோதா (வயது 28), தும்கூர் மாவட்டம் சிரா தாலுக்கா, சிக்கனஹல்லி பகுதியைச் சேர்ந்த சி.அர்.பவான் (27) ஆகிய 2 பேர்கள் அந்த கால் சென்டரை நிருவகித்து வருவதும் தெரிய வந்தது. கடன் செயலிகள் மூலம் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர் களுக்கு குறுகிய காலத்தில் உடனடி கடன் என்று ஆசை வார்த்தை கூறி, கடன் அளித்திருப்பதும் கடனை ஒரு வாரத்துக்குள் திரும்ப செலுத்தாதவர்களை இந்த கால் சென்டரில் இருந்து தொடர்பு கொண்ட மிரட்டி வந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து பிரமோதா, சி.ஆர்.பவான் ஆகிய இரண்டு பேர்களையும் மத்திய குற்றப்பிரிவு காவல்துறையினர் கடந்த 31ஆம் நாள் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 21 லேப்டாப், 20 செல்போன்கள், கம்பெனி தொடர்பான ஆவணங்களையும் போலீசார் பறிமுதல் செய்தனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், இவர்களை வழிநடத்தியது சீனைவைச் சேர்ந்த சியாவ் யங்மாவ், ஊயுமேன் ஒன் ஆகிய இரண்டு பேர்கள் என்பதும் அவர்கள் கர்நாடக மாநிலம் ஹரலூரில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் தங்கி இருப்பதும் மத்திய குற்ப்பிரிவு போலீசாருக்குத் தெரிய வந்தது. இதையடுத்து சீனர்கள் 2 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 2 லேப்டாப், 6 செல்போன்கள், பாஸ்போர்ட், ஏ.டி.எம்.கார்டு ஆகியவற்றை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர். இதற்கிடையே கைது செய்யப்பட்ட பிரமோதா, சி.ஆர்.பவான் ஆகிய இரண்டு பேர்களும் சென்னை அழைத்து வரப்பட்டனர். தாம்பரம் நீதிமன்றத்தில் நேர் நிறுத்தப்பட்டு இரண்டு பேரும் சிறையில் அடைக்கப்பட்டனர். அதே போல் சீனர்கள் இரண்டு பேர்களும் சென்னை அழைத்து வரப்பட்டு, நிதிமன்றத்தில் நேர் நிறுத்தப்பட்டு தனியாக சிறையில் அடைக்கப்பட்டனர்.

கைதான சீனர்களிடம் நடத்திய விசாரணையில் இந்த வழக்கின் முக்கியக் குற்றவாளி சீனாவில் இருப்பது தெரிய வந்தது. அவர்கள் போலீசாரிடம் அளித்த பரபரப்பு வாக்குமூலத்தில், ‘சீனாவில் வசிக்கும் ஹாங்க் என்பவர்தான் எங்களுக்கு வழிகாட்டி. அவர் தினமும் எங்களுக்கு ஆலோசனை வழங்குவார். அதன்படி நாங்கள் பிரமோதா, சி.ஆர்.பவான் ஆகியோருக்கு உத்தரவுகளை வழங்குவோம். தினமும் 10 பேருக்குக் கடன் அளிக்க வேண்டும் இந்த இலக்கை அடையாத ஊழியர்களை வார இறுதியில் பணியில் இருந்து நீக்கிவிடுவோம். இதற்குப் பயந்து ஊழியர்கள் ஆசைவார்த்தைகள் கூறி, வாடிக்கையாளர்களை கவர்ந்திழுப்பார்கள்“ என்று கூறினர். இந்த கடன் செயலிகளை நூத்தம் ராம் என்பவர் வடிவமைத்துக் கொடுத்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அந்நிய நாட்டு ஆசாமிகளுடன் இணைந்து, வட்டிக் கொடுமையில ஈடுபட்ட கும்பலைக் கைது செயத மத்திய குற்றப்பிரிவு காவல்துறையினரை ஆணையாளர்

மகஷேகுமார் அகர்வால் நேரில் வரவழைத்து வெகுமதியும், நற்சான்றிதழும் வழங்கிப் பாராட்டினார். பின்னர் அவர் பேட்டி அளித்தார்.

தொழில்நுட்பம் தொடர்பான இந்த வழக்கில் கர்நாடகா மாநிலத்தில் முகாமிட்டு, துரிதமாக செயல்பட்டு குற்றவாளிகளைக் கைது செய்துள்ள மத்திய குற்றப்பிரிவு காவல்துறையினரை நான் மனதாரப் பாராட்டுகிறேன். இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட 4 பேரும் 2 வங்கிக் கணக்குகளைப் பயன்படுத்தி வந்தனர். இதில் ஒரு வங்கிக் கணக்கில் ஒரு கோடியே 98 இலட்சமும், மற்றொரு வங்கிக் கணக்கில் 48 லட்சமும் இருந்தது. அந்த 2 வங்கிக் கணக்குகளையும் முடக்கி உள்ளோம். இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சீனர்கள் இரண்டு பேரும் விசா காலாவதியாகியும் ஓராண்டாக பெங்களூருவில தங்கி இருந்து, இந்த கடன் செயலியை வழிநடத்தி வந்துள்ளனர். இவர்கள் கடனுக்கு 36 விழுக்காடு வட்டியாக வசூலித்து வந்துள்ளனர். இந்த வழக்கில் முக்கியக் குற்றவாளியான சீனாவைச் சேர்ந்த ஹாங்க், இந்தியாவுக்கு வந்து சென்றுள்ளார். அவரது பயணம் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. இந்த வழக்கின் பின்னணியில் நிச்சயம் பலருக்குத் தொடர்பு இருக்கும். பதிக்கப்பட்டவர்களிடம் இருந்து தொடர்ந்து புகார்கள் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.


சமீபத்தில் தெலுங்கானாவில் கடன் செயலி மூலம் கடன் வழங்கி மிரட்டியதாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகளை அம்மாநில காவல்துறை கைது செய்துள்ளனர். அதில், இந்த வழக்கில் தொடர்புடையவர்கள் இருக்கிறார்களா? என்பது குறித்து அம்மாநில காவல்துறையிடம் தகவல்கள் கேட்கப்பட்டுள்ளது. தற்போது கைது செய்யப்பட்ட 4 பேர்கள் மீது பல்வேறு பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட லேப்டாப் செல்போன் மற்று ஆவணங்கள் தடயவியல் சோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த சோதனை முடிவில், எத்தனை பேர் கடன் செயலி மூலம் கடன் பெற்றுள்ளனர் என்பது உள்ளிட்ட தகவல்கள் தெரிய வரும்.

இந்தக் கும்பலுக்கு பணம் எங்கிருந்து வருகிறது? இதன் பின்னணியில் யார் யார் இருக்கிறார்கள்? உள்ளிட்ட தகவல்களைச் சேகரிப்பதற்காக நான்கு பேர்களையும் காவல்துறை காவலில் எடுத்து விசாரிக்க இருக்கிறோம். கடன் செயலிகள் சட்டவிரோதமாக இயக்கி, தவறுதலாக பயன்படுத்தப்படுவதால் இதனை தடை செய்ய வேண்டும் என்று சம்பந்தப்பட்ட துறைக்கு கடிதம் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.


## விளம்பரக் கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ. 10,000/- (முழுப்பக்கம்)**
**பின்னட்டை உள்ளே ரூ. 10,000/- (முழுப்பக்கம்)**
**பின்னட்டை ரூ. 15,000/- (முழுப்பக்கம்)**
**கருப்புவெள்ளை ரூ. 5,000/-**

## தற்போது விற்பனையில்






பெ. மணியரசன் எழுதிய
**பா.ச.க. பாசிச எதிர்ப்பின் பாதை**
பக்கம் : 48 / விலை : ரூ. 35/-

கி.வெங்கட்ராமன் எழுதிய
**கொரோனாவுக்கு பின் மாற்று பாதை**
பக்கம் : 56 / விலை ரூ. 45/-

நூல் கிடைக்குமிடம்

பன்மை வெளி

21, முதல் தெரு, முதல் பிரிவு,
கலைஞர் கருணாநிதி நகர், சென்னை - 600 078
**பேச :** 044 - 2474 2911, 94439 18095, 98408 48594
**இணையம்** : www.panmaiveli.com |
மின்னஞ்சல் : panmaiveli@gmail.com

# சொர்க்கத்தில் நீங்கள்!

ஃபெமி ஓடெடோலா என்பவர் நைஜீரியாவைச் சேர்ந்தவர். உலகப் பணக்கார வரிசையில் ஆயிரமாவது இடத்தில் இருப்பவர். ஒரு தொலைபேசி நேர்காணலில் கோடீஸ்வரர் ஃபெமி ஓடெடோலாவை வானொலித் தொகுப்பாளர் ஒருவர் பேட்டி எடுத்தார்.

உங்களை வாழ்க்கையில் மகிழ்ச்சியான மனிதராக மாற்றியது எது?

நான் வாழ்க்கையில் மகிழ்ச்சின் நான்கு நிலைகளைக் கடந்து விட்டேன். நிறைவாக உண்மையான மகிழ்ச்சியின் பொருளைப் புரிந்து கொண்டேன்.

1. முதல் கட்டமாக செல்வத்தையும் வழிமுறைகளையும் குவிப்பதாக இருந்தது. ஆனால் இந்த கால கட்டத்தில் நான் விரும்பிய மகிழ்ச்சி எனக்குக் கிடைக்கவில்லை.

2. பின்னர் மதிப்புமிக்க பொருட்கள் மற்றும் பொருட்களைச் சேகரிக்கும் இரண்டாம் கட்டம் வந்தது. அனால் இந்த விசயத்தில் விளைவும் தற்காலிகமானது என்பதை நான் உணர்ந்தேன். மதிப்புமிக்க பொருட்களின் மீதான ஈர்ப்பு நீண்டகாலம் நீடிக்காது.

3. பின்னர் பெரிய திட்டங்களைப் பெறுவதற்கான மூன்றாம் கட்டம் வந்தது. நைஜீரியா, ஆப்பிரிக்காவில் 95 விழுக்காடு டீசல் விநியோகத்தை நான் வைத்திருந்தேன். ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் நான் மிகப்பெரிய கப்பல் உரிமையாளராக இருந்தேன். ஆனால், இங்கே கூட நான் கற்பனை செய்த மகிழ்ச்சி கிடைக்க வில்லை.

4. நான்காவது கட்டம்.

என் நண்பர் ஒருவர், ஊனமுற்ற சில குழந்தைகளுக்கு சக்கர நாற்காலி வாங்கச் சொன்ன நேரம்... சுமார் 200 குழந்தைகள்.

நண்பரின் வேண்டுகோளின்படி, நான் உடனடியாக சக்கர நாற்காலிகள் வாங்கினேன். ஆனால் நண்பர், நான் அவருடன் சென்று சக்கர நாற்காலி களை குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். நான் தயாராகி அவருடன் சென்றேன்.

அங்கே நான் சக்கர நாற்காலிகளை குழந்தைகளுக்கு என் சொந்தக் கைகளால் கொடுத்தேன். இந்தக் குழந்தைகளின் முகங்களில் விசித்திர மான பிரகாசத்தை நான் கண்டேன். அவர்கள் அனைவரும் சக்கர நாற்காலிகளில் உட்கார்ந்து, சுற்றி நகர்ந்து வேடிக்கை பார்த்தனர். அவர்கள் ஏதோ சொர்க்கத் தைக் கண்டது போல் மகிழ்ச்சியில் ஆழ்ந்து இருந்தனர். எனக்குள் உண்மையான மகிழ்ச்சியை உணர்ந்தேன்.



நான் வெளியேற முடிவு செய்தபோது குழந்தைக ளில் ஒருவர் என் கால்களைப் பிடித்தார். நான் என் கால்களை மெதுவாக விடுவிக்க முயன்றேன். ஆனால் குழந்தை என் முகத்தை உற்றுப் பார்த்து, என் கால்களை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டது.

நான் குனிந்து குழந்தையிடம் கேட்டேன். உங்களுக்கு வேறு ஏதாவது தேவையா?

அந்தக் குழந்தை எனக்கு அளித்த பதில் எனக்கு மகிழ்ச்சி அளித்தது மட்டுமல்லாமல், வாழ்க்கையைப் பற்றிய எனது அணுகுமுறையையும் முற்றிலுமாக மாற்றியது.

அந்தக் குழந்தை கூறியது...

“நான் உங்கள் முகத்தை நினைவில் வைத்துக் கொள்ள விரும்புகிறேன். உங்களைச் சொர்க்கத்தில் சந்திக்கும்போது நன்றி சொல்ல... உங்கள் முகம் சரியாக அடையாளம் காணப்பட்டு இருக்க வேண்டும்.

## அஞ்சல் துறையில் கணக்கர் தேர்வுகளைத் தமிழில் நடத்த வேண்டும்!

### மத்திய அரசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வலியுறுத்தல்!

அஞ்சல்துறைக்கு கணக்கர் பதவிகளுக்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான அறிவிப்பில் இந்தி மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மட்டுமே இந்தத் தேர்வு நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கணக்கர் பதவிகளுக்கான தேர்வை தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளில் நடத்த வேண்டும். அதற்கான அறிவிப்பை வெளியிடும் வரை இந்தத் தேர்வை நடத்தக் கூடாது என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

மத்திய அரசு கடந்த ஆண்டு அஞ்சல் துறையில் 'போஸ்ட்மேன்' பதவிகளுக்கு வெளியிட்ட அறிவிப்பிலும் இதுபோலவே ஆங்கிலத்திலும் இந்தியிலும் மட்டுமே தேர்வு என அறிவித்தது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. அதையும் மீறி அந்தத் தேர்வு நடத்தப்பட்டது. அதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் தேர்வு முடிவுகளை வெளியிடக் கூடாது என தடை விதித்து உத்தரவிட்டது.

அது தொடர்பாக மக்களவையிலும் மாநிலங்களவை யிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரச்சனை எழுப்பியதால் '2019 ஜூலை மாதம் 14ஆம் தேதி நடத்தப்பட்ட தேர்வு ரத்து செய்யப்படுவதாகவும், இனி தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளில் தேர்வு நடத்தப்படும் என்றும், மத்திய அரசு தமிழ் உட்பட எல்லா மொழிகளையும் மதிப்ப தாகவும்' சட்ட அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் நாடாள மன்றத்தில் உறுதியளித்தார். அதன் பின்னர் அந்தத் தேர்வு தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளில் நடத்தப்பட்டது.

மத்திய அரசு கடந்த ஆண்டு கொடுத்த உறுதிமொழிக்கு மாறாக இப்போது கணக்கர் தேர்வுகளை இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே நடத்துவதற்கான அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டிருக்கிறது. எப்படியாவது தமிழ் நாட்டில் இந்தியைத் திணித்து விட வேண்டும் என்ற உள் நோக்கத்தோடு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, இந்த அறிவிப்பை ரத்து செய்ய வேண்டும். தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளிலும் இந்தத் தேர்வை நடத்துவதற்கான புதிய அறிவிப்பை வெளியிட வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.



நில அளவுகள்

நில அளவைகள் பல்வேறு அளவுகளில் குறிப்பிடப்படுகின்றன. அது பற்றிய விவரம்:-

1 ஹெக்டேர் - 2 ஏக்கர் 47 சென்ட்

1 ஹெக்டேர் - 10,000 சதுர மீட்டர்

1 ஏக்கர் - 0.405 ஹெக்டேர்

1 ஏக்கர் - 4046.82 சதுர மீட்டர்

1 ஏக்கர் - 43,560 சதுர அடிகள்

1 ஏக்கர் - 100 சென்ட்

1 சென்ட் - 435.6 சதுர அடிகள்

1 சென்ட் - 40.5 சதுர மீட்டர்

1 கிரவுண்ட் - 222.96 சதுர மீட்டர்

1 கிரவுண்ட் - 2400 சதுர அடிகள்

1 மீட்டர் - 3.281 அடி

1 குழி - 44 சென்ட்

1 மா - 100 குழி

1 காணி - 132 சென்ட் (3 குழி)

1 காணி - 1.32 ஏக்கர்

1 காணி - 57,499 சதுர அடி

1 டிசிமல் - 1 1/2 சென்ட்

1 அடி - 12 இன்ச் (30.38 செ.மீ)

1 மைல் - 1.61 கிலோ மீட்டர் (1610 மீட்டர்)

1 மைல் - 5280 அடி (8 பர்லாங்கு)

1 கிலோ மீட்டர் - 1000 மீட்டர் (0.62 மைல்)

1 கிலோ மீட்டர் - 3280 அடி

1 கிலோ மீட்டர் - 5 பர்லாங்கு

1.61 கிலோ மீட்டர் - 1 மைல்

1 பர்லாங்கு - 660 அடி (220 கெஜம்)

1 செயின் - 66 அடி (100 லிங்க்)

1 லிங்க் - 0.66 அடி

1 கெஜம் - 3 அடி

8 பர்லாங்கு - 1 மைல் (201.16 மீட்டர்)

1 ஏர்ஸ் - 1076 சதுர அடி (2.47 சென்ட்)

22 கெஜம் - 1 செயின் (66 அடி)

10 செயின் - 1 பர்லாங்கு

1 இன்ச் - 2.54 செ.மீ

1 செ.மீ - 0.3937 செ.மீ

1 கெஜம் - 0.9144 மீட்டர்

1 மீட்டர் - 1.093613 கெஜம் (3.28 அடி)

1 சதுர மீட்டர் - 10.76391 சதுர அடிகள்

1 சதுர அடி - 0.0929 சதுர மீட்டர்

30 சதுர மைல் - 1 டவுன்சிப்

640 ஏக்கர் - 1 சதுர மைல்...



# நட்சத்திரம்

'முற்றம்' எனும் இனிய அனுபவச்சொல் என்னை சிறு பிள்ளைப் பருவத்திற்கு இட்டுச் செல்கிறது. ஆம் அந்த ஓட்டு வீட்டிலே நான்கு முனைகள் தாழ்ந்து வந்து வான் வெளியைக் காணும் வண்ணம் வடிவமைக்கப் பட்ட முற்ற வீடுகளை காணோம் என்ற நிலை உள்ளத் தைக் கனக்கச் செய்கிறது.

இரவு வேளையில் முற்றத்தில் பாய் போட்டு படுத்து அண்ணாந்து பார்க்கும்போது அந்த உயர்ந்த வானில் காரிருளில் மின்னும் நட்சத்திரங்கள் அழகே தனி. அதில் சிறிய நட்சத்திரங்கள் பெரிய நட்சத்திரங்கள் என வகைப் படுத்தி விடலாம். நட்சத்திரங்கள் வானில் சிறியதாகத் தெரிவதற்குக் காரணம் அவை பூமியிலிருந்து மிக மிக உயரத்தில் அமைந்துள்ளவை என்று பொருள். நட்சத் திரங்கள் வானில் பெரியதாக தெரிவதற்குக் காரணம் அவை வானிலிருந்து பூமியை நோக்கி தாழ்ந்து வந்துள் ளன என்று அர்த்தம்.

ஆம் டிசம்பர் மாதம் 21ஆம் நாள் ஒரு பெரிய நட்சத்திரம் வானில் தோன்றியது. அதுதான் ஆண்டவர் இயேசு பெத்லையில் பிறந்தபோது தோன்றிய நட்சத்திரம் என்ற செய்தி மறக்க மனமின்றி உலக மக்கள் அனைவரையும் குதூகலிக்கச் செய்கிறது. ஆம் உலக இரட்சகர் இயேசுவுக்கு நட்சத்திரம் எனும் பெயர் திருவிவிலியத்தில் எண்ணாகமப் புத்தகத்தில் 24:17இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏசாயா தீர்க்கரின் நூலில் 14:12இல் அவர் விடிவெள்ளி என்று அழைக்கப்படுகிறார். புதிய ஏற்பாட்டில் 2பேதுரு 1:19இல் அந்த விடிவெள்ளி உங்களது உள்ளங்களில் உதயமாகி உள்ளது என உணர்த்தப்படுகிறோம்.

இரட்சகர் இயேசு என்னும் நட்சத்திரம் நமக்கு போதிக்கும் பாடங்கள் ஆயிரம் ஆயிரம் ஆகும். அவை களில் ஏழு குறிப்புகள் இங்கு கவனிக்கத்தக்கவை.

1) இயேசு மக்கள் கூட்டத்தின் நட்சத்திரம். மத்தேயு 2:2, "யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம்," என்றார்கள் கிழக்கிலிருந்து வந்திருந்த ஞானிகள். எல்லா திசையினருக்கும் எல்லா தேசத்தா ருக்கும் உரியவரே இயேசு நட்சத்திரம்.

2) அவர் ஒரு விடி வெள்ளி நட்சத்திரம் அவரது தோற்றம் ஒரு வரலாறு. அரவது தோற்றத்திலேயே காலம் கிறித்துவுக்கு முன் கிறித்துவுக்குப் பின் என வரையறுக்கப்பட்டது. இயேசு இரட்சகர் ஒரு வரலாற்று நட்சத்திரம்.

3) அனைவரும் அதாவது உலகில் உள்ள அனை வரும் காணும் வண்ணமாக இயேசுவின் நட் சத்திரம் வானில் உயர்ந்து ஒளிர்கிறது. அந்த உயர்வு தனித்து நிற்க அல்ல, அனைவரையும் சமமாகப் பார்த்திட. மேலும் அனைவரும் தவறாமல் பார்த்திட.

4) அவ்வாறு தோன்றும் இயேசுவின் நட்சத்திரம் பெரிய நட்சத்திரம். அது அவ்வாறு பெரியதாக காட்சி யளிக்கக் காரணம், அது தன் நிலையிலிருந்து தாழ்ந்து வந்துள்ளதே ஆகும். எட்டிப்பிடிக்க, கிட்டிச் சேர அது அவ்வாறு தாழ்ந்து வருகிறது.

5) இயேசுவின் நட்சத்திரம் பிரகாசமான நட்சத்திரம். ஒளியூட்டும் நட்சத்திரம். இருளில் இருக்கும் மக்களுக்கு வருங்காலம் இருண்டுவிட்டதே என ஏங்கும் மக்களுக்கு, வழிதடுமாறும் பேதைகளுக்கு ஒளியூட்டும், வழிகாட்டும், நம்பிக்கையூட்டும் நட்சத்திரம் அது.

6) அது இயங்கும் நட்சத்திரம். செயல்படும் நட்சத்திரம். நன்மை செய்ய, முன்னோடியாக விளங்க, காத்துக்கிடக்காமல் துவங்கி செயல்படும் நட்சத்திரம்.

7) அது விண்ணில் மிதக்கும் நட்சத்திரம். மிதக்கும் தன்மை தனித்திருத்தலில் நிகழாது. மாறாக இணைந் திருத்தலில் சாத்தியமாகும். அவ்வாறு இயேசுவின் நட்சத் திரம் மனிதர் அனைவரும் தனித்தியங்காமல் சார்ந்தியங்க அழைக்கும் நட்சத்திரமாக வழி நடத்துகிறது.

முற்றமே நட்சத்திரத்தை முற்றும் இரசிக்க துணை புரிந்தாயே, உம்மை வாழ்த்துகிறோம். உம்மாலே மனுக் குலம் வளம்பெற உம் வளர்ச்சிக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இனிய கிறித்து பிறப்பு நல்வாழ்த்துகள்! புத்தாண்டு நல்வாழ்த்துகள்! பொங்கல் நல்வாழ்த்துகள்!!

**மேன்யல் சு. டைட்டஸ்,**
பேராயச் செயலர், சென்னைப் பேராயம்,
தென்னிந்தியத் திருச்சபை.

ஒரு காலத்தில் உணவு விடுதிகளைப் பெரும்பாலும் பிராமணர்களே நடத்திவந்தனர்.

பிராமணர் அல்லாதார் உள்ளே சென்று உட்கார்ந்து சாப்பிட முடியாது. எடுப்புச் சாப்பாடுதான் வாங்கிச் சென்று வெளியே சாப்பிட வேண்டும்.

சென்னையில் அன்றைய மவுன்ட் ரோடிலும், ஜார்ஜ் டவுனிலும் இருந்த உணவு விடுதிகளில், ‘பஞ்சமர்களும், நாய்களும், குஷ்டரோகிகளும் உள்ளே நுழையக் கூடாது’ என்று விளம்பரப் பலகைகளை வைத்திருந்தனர்.

இரயில்வே உணவு விடுதிகளில் பிராமணாள், இதராள் என்று விளம்பரப் பலகை

வைக்கப்பட்டு இருந்தது. இது மட்டுமல்ல. இருப்புப் பாதைகள் போடப்பட்டு, இரயில் பயணம்

தொடங்கிய காலத்தில், நான்கு வகைப் பெட்டிகள் இருந்தன. அவற்றை நான்கு வருணத்தாரும் தனித் தனியாகப் பயன்படுத்தும்படியாக உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என

இந்து மத வேதியக் கூட்டம் இரயில்வே நிர்வாகத்தைக் கேட்கும் அளவுக்குப் பேதங்கள் மோசமாக இருந்தன.

இப்படிப்பட்ட சூழலில்தான் 1912ல் டாக்டர் சி.நடேசனாரின் முயற்சியால் தோற்றுவிக்கப்பட்டது ‘மெட்ராஸ் யுனைடெட் லீக்’. அதுவே 1913 முதல் பிராமணர் அல்லாதாரைக் குறிக்க ‘திராவிடர் சங்கம்’ என்று புதுப் பெயர் பெற்றது

பிராமணர் அல்லாதார் இயக்கமான திராவிட இயக்கம் தோன்றியதற்கு முக்கியக் காரணம்,

காங்கிரஸில் ஆதிக்கம் செலுத்திய பிராமண வழக்கறிஞர்கள்தான். அவர்கள் ஆதிக்கம் எங்கும் நிறைந்திருந்தது என்பதைத் தனது ‘விடுதலைப் போரில் தமிழகம்’ என்னும் நூலில் பதிவுசெய்திருக்கிறார் திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகளை நடத்திவந்த சிலம்புச் செல்வர் ம.பொ.சி.

அந்தக் காலகட்டத்தில் உத்தியோகத் துறையில் எங்கும் பிராமணர் ஆதிக்கம்; பிராமணர் அல்லாதாருக்கு முட்டுக்கட்டை என்ற நிலை இருந்தது. எடுத்துக்காட்டாக 1912ல் சென்னை மாகாணத்தின் நிலை என்ன? துணை ஆட்சியர்களில் 55%, சார்பு நீதிபதி 82.5%, மாவட்ட முன்சீப்களில் 72.6% பிராமணர்கள். இந்தப் பதவிகளில் இந்து பிராமணர் அல்லாதார் முறையே 21.5%, 16.7%, 19.5%.

கடப்பை மாவட்டத்தில் வருவாய்த் துறையில் உயர் பதவி வகித்த டி.கிருஷ்ணாராவ் (செரஸ்தார் மாவட்ட ஆட்சியர் பதவிக்கு நிகரானது) என்பவரின் உறவினர்கள் 116 பேர் அந்தத் துறையில் இருந்தனர். சென்னை சட்ட மன்றத்தில் 1914ல் சட்ட மன்ற உறுப்பினர் குன்சிராமன்



## நாட்டை நல்வழிப்படுத்தியவர்கள்!

நாயர் எழுப்பிய வினாவுக்குக் கொடுக்கப்பட்ட பதில் என்ன?

சென்னைப் பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட 650 பட்டதாரிகளில் பிராமணர்கள் 452 பேர், பிராமணர் அல்லாத இந்துக்கள் 12 பேர், பிற இனத்தவர் 74 பேர்!

கல்வி, வேலைவாய்ப்பு நிலைதான் இப்படி என்றால் சமுதாய நிலை என்ன?.

1916ல் டி.எம்.நாயர், தியாகராயர் உள்ளிட்டோர் முன்னின்று தொடங்கிய தென்னிந்திய நலவுரிமைச் சங்கம், நீதிக் கட்சியாக அழைக்கப்பெற்றது. நீதிக் கட்சி திராவிடர் கழகம் ஆனது. திராவிடர் கழகத்திலிருந்து திமுகவும் அதிலிருந்து அதிமுகவும் உருவாயின. ஒட்டுமொத்தமாக இவற்றை 'திராவிடர் இயக்கம்' என்று ஒரு பொதுச் சொல்லால் குறிப்பதாகக் கொண்டால், இழிவுகள் பலவற்றிலிருந்து இந்தத் திராவிடர் இயக்கமே நம் மக்களை மீட்டெடுத்தது.

திராவிடர் என்ற பெயர் மாற்றமே திராவிட இயக்கத்தின் சாதனை என்று சொல்லலாம். ஏனென்றால், 1901ல் எடுக்கப்பட்ட சென்னை மாகாணத்து மக்கள்தொகைக் கணக்கில் 'பிராமணர்கள் 3.4%, சூத்திரர்கள் 94.3%' என்று பிராமணர் அல்லாதாரை அரசாங்கமே சூத்திரர்கள் என்று குறிப்பிடும் இழிநிலைதான் அன்று இருந்தது.

இந்த நிலையில்தான் பெரியார், 'சூத்திரன் என்றால் ஆத்திரம் கொண்டடி!' என்ற பெருமுழக்கத்தை வீதிகளில் எல்லாம் ஒலிக்கச் செய்தார். பின்னதாக, நீதிக் கட்சி ஆதரவு பெற்ற டாக்டர் சுப்பராயன் அமைச்சரவை 'சூத்திரன்' என்ற இழி பட்டத்தைப் பதிவேடுகளிலிருந்து ஒழித்தது. ஆட்சியில் பங்கேற்று நேரடி மாற்றங்களைக் கொண்டுவந்தது மட்டும் அல்லாமல், எல்லாத் தளங்களிலும் மாற்றுகளை உருவாக்க முற்பட்டது திராவிட இயக்கம்.

டாக்டர் சி.நடேசன், பிராமணர் அல்லாத மாணவர்கள் தங்கிப் படிக்க சென்னையில் 1916ல் உருவாக்கிய திராவிட சங்க விடுதியை (Dravidian Association Hostel) ஓர் உதாரணமாகச் சொல்லலாம்.

மாணவர் விடுதிகளில்கூடப் பாகுபாடுகள் நிறைந்திருந்த காலத்தில் மாற்றாகத் தொடங்கப்பட்ட மாணவர் விடுதி இது. பிற்காலத்தில் இந்திய நிதியமைச்சராக ஆகவிருந்த ஆர்.கே.சண்முகம், பாரிஸ்டர் ரங்கராமானுஜம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தர்களாக விளங்கிய டி.எம்.நாராயணசாமிப் பிள்ளை, எஸ்.ஜி.மணவாள ராமானுஜம் மற்றும் சடகோப முதலியார், பிற்காலத்தில் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக வந்த சுப்பிரமணிய நாடார் போன்றவர்களெல்லாம் இந்த விடுதியில் தங்கிப் படித்தவர்கள்தான்!

திராவிட இயக்கம் கொண்டுவந்த மாற்றங்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. சுதந்திரத்துக்கு முன்பு சென்னை மாகாணத்தில் 19201937 காலகட்டத்தில் ஆட்சியிலிருந்து நீதிக் கட்சி ஆட்சி கொண்டுவந்த மாற்றங்கள்.

2. ஆட்சியிலிருந்து இறங்கிய நீதிக் கட்சியின் தலைவராக 1938ல் பெரியார் பொறுப்பேற்று, பிறகு 1944 ல் திராவிடர் கழகமாக அதை உருமாற்றிய பின்னர், தேர்தல் அரசியலிலிருந்து விலகி, பொதுத் தளத்திலிருந்து மேற்கொண்டுவரும் மாற்றங்கள்.

3. 1967 முதலாகத் தமிழகத்தில் ஆட்சியில் இருந்துவரும் திமுக, அதிமுக இரு திராவிடக் கட்சிகள் தங்கள் ஆட்சிக் காலத்தில் கொண்டுவந்த மாற்றங்கள்.

இவற்றில் தேர்தல் அரசியலில் பங்கேற்காமல், பொதுத் தளத்தில் நின்று அரசியல் கட்சிகளுக்கான சமூக நீதி அழுத்தங்களையும் கொடுத்துவரும் திராவிடர் கழகம் வெளியிலிருந்து உருவாக்கிவரும் மாற்றங்கள் என்றால், இரு திராவிடக் கட்சிகளின் ஐம்பதாண்டு ஆட்சிக் காலம் மட்டுமின்றி காமராஜரின் ஆட்சிக் காலகட்டத்தையும்கூடச் சேர்த்துக்கொள்ள வேண்டியிருக் கும். பிராமணியத்துக்குத் துணை போகும் காங்கிரஸை ஒழிப்பதே என் கடமை என்று கூறி காங்கிரஸிலிருந்து வெளியேறி வந்த பெரியார், காமராஜரின் ஆட்சிக்காக அதே காங்கிரஸைத் தன் தோளில் தூக்கிச் சுமந்தார் என்பதும் பெரியார் முன்மொழிந்த பல திட்டங்களையும் யோசனைகளையும் நிறைவேற்றியவர் காமராஜர் என்பதும் வரலாறு.

ராஜாஜி கொண்டுவந்த குலக்கல்வித் திட்டத்தைத் தந்தை பெரியார் தலைமை தாங்கி தடுத்து நிறுத்தியது முக்கியமான ஒன்று. எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், சமூக நீதி, தமிழ், தமிழர் நலன் என்பதே எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு திராவிடர் கழகத்தின் உயிர்மூச்சாக இருந்திருக்கிறது. அதேபோல, பொதுத் தளத்தில் அது உருவாக்கிய கருத்துருவாக்கம், கட்சிக்கு அப்பாற்பட்டு ஆட்சியாளர்களைச் செயல்பட வைத்திருக்கிறது. ஆகையால், திராவிடர் கழகம் பொதுத் தளத்தில் செய்த காரியங்களை இந்தச் சின்ன கட்டுரைக்குள் கொண்டுவருவது சாத்தியமற்றது என்பதால், முன்னதாக நீதிக் கட்சி வடிவிலும் பின்னதாக திராவிடக் கட்சிகளுக்குப் பின்னின்றும்

செய்த மிக முக்கியமான மாற்றங்களை மட்டும் இங்கே தருகிறேன்.

நீதிக் கட்சி கொண்டுவந்த முக்கியமான 10 அரசாணைகள், சட்டங்கள்.

நாட்டிலேயே முன்னோடியாகப் பெண்களுக்கு வாக்குரிமை (10.05.1921) பஞ்சமர் என்ற சொல் நீக்கி ஆதிதிராவிடர் என்றழைக்கும் அரசாணை (25.3.1922)

கல்லூரிகளில் எல்லாத் தரப்பு மாணவர்களையும் சேர்க்க குழுக்கள் அமைக்கும் அரசாணை (20.5.1922)

கல்வி மறுக்கப்பட்ட பிராமணரல்லாத குழந்தைகளைத் தொடக்கப் பள்ளிகளில் சேர்ப்பதற்கான நடவடிக்கை (21.6.1923)

புதிய பல்கலைக்கழகம் காண சட்டம் இயற்றப்பட்டது. பின்னாளில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உருவாக இது காரணமாயிற்று. தாழ்த்தப்பட்ட மாணவர்களைக் கல்வி நிலையங்களில் மிகுதியாகச் சேர்ப்பதற்கான நடவடிக்கை (24.9.1924)

குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த பெண்களைக் கோயிலுக்குப் பொட்டுக் கட்டிவிட்டு, தேவரடியார் என்று முத்திரை குத்தும் முறைக்கு முடிவுகட்டும் சட்டம் (1.1.1925)

கோயில்களில் கொள்ளையை முடிவுக்குக் கொண்டு வர இந்து சமய அறநிலையச் சட்டம் (27.01.1925)

சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியில் பிராமணரல்லாத மாணவர்களைச் சேர்ப்பதற்கான உத்தரவு (15.9.1928)

எஸ்.முத்தையா முதலியாரின் முயற்சியால் முதல் இடஒதுக்கீட்டுச் சட்டம் (13.9.1928). வகுப்புவாரி ஒதுக்கீட்டுக்கான அரசாணை (27.2.1929)

சமூகமாற்றத்துக்கு அடித்தளமிட்ட கல்வி, சமூக நலத் திட்டங்கள்

கல்லூரி முதல்வர்கள் எல்லாம் பிராமணர்களாகவே இருந்த நிலையில், பிராமணர் அல்லாத மாணவர் சேர்க்கைக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டிருந்த காலகட்டம் அது;

பனகல் அரசர் ஒவ்வொரு கல்லூரியிலும் மாணவர் சேர்க்கைக்குக் குழுக்கள் அமைக்க உத்தரவிட்டார். மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கு சம்ஸ்கிருதம் படித்திருக்க வேண்டும் எனும் நடைமுறையை நீக்கினார். ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் இருந்த மருத்துவத் துறையை இந்திய மயமாக்கிய பெருமையும் நீதிக் கட்சி முதலமைச்சர் பனகல் அரசரையே சேரும்.

சென்னை மாநிலக் கல்லூரி சமஸ்கிருதப் பேராசிரியர் குப்புசாமி சாஸ்திரிக்கு மாதச் சம்பளம் ரூ.300, தமிழ்ப் பேராசிரியர் கா.நமசிவாயனாருக்கு மாதச் சம்பளம் ரூ.81 என்றிருந்தது. இந்த பேதம் நீக்கப்பட்டது.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதம் படிப்பதற்குத்தான் வழி இருந்ததே தவிர, தமிழ் படிக்கக் கதவு அடைக்கப்பட்டது.

நீதிக் கட்சிப் பிரமுகர்கள் ஆர்.வெங்கடரத்தினம் நாயுடு, டி.என்.சிவஞானம் பிள்ளை, எஸ்.முத்தையா முதலியார், டாக்டர் ஏ.இலட்சுமணசாமி முதலியார் போன்ற தலைவர்கள் போராடிப் போராடிதான் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழி கற்பிக்கப்படுவதற்கு வழிவகுத்தனர்.

பிட்டி. தியாகராயர் சென்னை மாநகர மேயராக இருந்தபோதுதான், 1921ல் பள்ளிகளில்

இலவச நண்பகல் உணவு அளித்தார். இதற்காக சென்னை மாநகராட்சிப் பணம் செலவழிப்பதை நகராட்சி சட்டத்தைத் திருத்தி மாகாண அரசே ஏற்றுக்கொண்டது. இதன் காரணமாகப் பள்ளிகளுக்கு வரும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்தது. இன்னும் ஒரு குறிப்பிடத் தகுந்த தகவல் உண்டு.

இலவச இரவுப் பள்ளிகள் நடத்த முன்வந்தால், மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்ற நிலைப்பாடுதான் அது. பகல் பொழுதில் பணியாற்றச் செல்வோர் இரவில் படிக்கும் ஒரு வாய்ப்புக்குத் கதவைத் திறந்துவிட்டவர் நீதிக் கட்சித் தலைவர் பிட்டி. தியாகராயர்தான்.

தஞ்சை மாவட்டத்தில் திருவையாறு அரசினர் கல்லூரி சம்ஸ்கிருதக் கல்வி நிலையமாக இருந்ததை மாற்றி, தமிழும் சொல்லிக்கொடுக்கப்பட ஆவன செய்தார் நீதிக் கட்சித் தலைவர் ஏ.டி.பன்னீர்செல்வம். பிராமண மாணவர்கள் மட்டும் பயன் கண்ட ராஜா மடம், ஒரத்தநாடு விடுதிகள் மற்றவருக்கும் திறந்துவிடப்பட்டன. தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 10ஆம் வகுப்புத் தேர்வுக்குப் பணம் கட்டத் தேவையில்லை என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதேபோல, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் அரைச் சம்பளம் கட்டினால் போதும் என்று அறிவிக்கப்பட்டது. அரசுப் பள்ளிகளில் வகுப்புரிமையை நிலைநாட்ட ஆண்டுதோறும் அறிக்கைகள் வெளியிடப்பட உத்தரவிடப்பட்டது.

பேருந்துகளில் தாழ்த்தப்பட்டவர்களை அனுமதிக்காவிட்டால் பேருந்துகளின் உரிமம் ரத்துசெய்யப்படும் என்று ஆணையிட்டு, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஊரி

லிருந்து பள்ளிகளை நோக்கிச் செல்ல வழிவகுத்தவர் நீதிக் கட்சித் தலைவர்களில் ஒருவரான ஊ.பு.அ. சவுந்தர பாண்டியன்.

தாழ்த்தப்பட்டவர்களைச் சேர்க்காத பள்ளிகளுக்கு மானியம் நிறுத்தப்படும் என்று ஆணையிட்டவர் முன்னோடிகளில் ஒருவரான சிவகங்கை எஸ்.இராமச்சந்திரன்.

தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றம் கருதித் தனி அலுவலர்கள் நியமனம். தனி அலுவலர் என்பது 'லேபர் கமிஷனர்' என்று மாற்றம். இம்மக்களுக்கு 7 லட்சத்து 36 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் வழங்கப்பட்டன. தாழ்த்தப்பட்ட வகுப்பாரில் என்னென்ன சாதிகள் உள்ளன என்பதைத் தொகுக்கும் பணி தொடங்கப்பட்டது. குறவர்கள் சீர்திருத்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக 2,776 கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. வலையர், குறவர் ஆகியோரைக் குற்றப் பரம்பரையிலிருந்து மீட்க அவர்களின் குழந்தைகளுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது. துப்புரவு வகுப்பினர், தோடர்கள், கோடர்கள், படகர்கள் ஆகியோருக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டன. மீனவர் நலன் காப்பதற்காக 'லேபர் கமிஷன்' நியமிக்கப்பட்டது. இதேபோல கள்ளர் சமுதாய முன்னேற்றத்துக்காகவும் 'லேபர் கமிஷன்' நியமிக்கப்பட்டது.

திராவிடக் கட்சிகள் முன்னெடுத்த பெரும் மாற்றத்துக்கான நகர்வுகள்

திமுகவின் முதல் முதல்வரான அண்ணா மிக விரைவில் காலமாகிவிட்டதால், இரண்டாண்டுக்கும் குறைவாகவே ஆட்சியில் இருந்தார். எனினும், திராவிடக் கட்சிகள் செல்ல வேண்டிய திசையைச் சுட்டும் வகையில், நான்கு முக்கியமான முடிவுகளை அவர் முன்னெடுத்தார்.

1. சடங்குகள், தாலி மறுத்து நடைபெறும் சுயமரியாதைத் திருமணங்களுக்கும் சட்ட அங்கீகாரம் அளிக்கும் வகையில் சட்டத் திருத்தம்.

2. சென்னை மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்ற பெயர் மாற்றம்.

3. தமிழ்நாட்டில் இந்திக்கு இடமில்லை; தமிழ், ஆங்கிலம் மட்டுமே பயிற்றுமொழி என்ற இருமொழிக் கொள்கை முடிவு.

4. அரசு அலுவலகங்களில் எந்த மதம் தொடர்பான கடவுள் படங்களும் உருவங்களும் இருக்கக் கூடாது என்ற ஆணை.

முகநூல் பதிவு

# வாரிசு அரசிலை ஒழிப்போம் என்று கூறி வருகிற பாசகவில் உள்ள வாரிசுகள்!

இமாச்சல் முன்னாள் முதலமைச்சர் பிரேம்குமார் துமலின் மகன் அனுராக் தாக்கூர் மத்திய அமைச்சர்

பாசக பொருளாளர் வேத் பிரகாஷ் கோயலின் மகன் அமைச்சர் பியூஸ் கோயல்

முன்னாள் மத்திய அமைச்சர் பிமோத் மகாஜன் மகள் பூனம் மகாஜன் எம்.பி

மத்திய அமைச்சர் மேனகா காந்தியின் மகன் வருண் காந்தி எம்.பி

முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ் மகன் கங்காதர்பந்த பட்னாவிஸ் எம்.எல்.ஏ

தேவேந்திர பட்னாவிஸ் அத்தை சோபா பட்னாவிஸ் எம்.எல்.ஏ

முன்னாள் மத்திய அமைச்சர் கோபிநாத் முண்டேவின் மகள் பங்கஜா முண்டே மாநில அமைச்சர்

லால்ஜி டாண்டன் எம்.பி.யின் மகன் ஆசுதோஸ் எம்.எல்.ஏ

மத்திய அமைச்சர் ராஜ்நாத்சிங்கின் மகன் பஞ்கஜ் சிங் உத்தரப்பிரதேச எம்.எல்.ஏ

டெல்லி முன்னாள் முதலமைச்சர் சாகிப் சிங் வர்மாவின் மகன் பர்வேஷ் சர்மா எம்.பி

பாஜக நிறுவனத்தலைவர் விஜராஜே சிந்தியா, வசுந்தரா ராஜே சிந்தியா முன்னாள் முதலமைச்சர், யசோதரா ராஜே எம்.பி, துஷ்யந்த் ராஜே அமைச்சர்

உபி முன்னாள் முதலமைச்சர் கல்யாண்சிங் மகன் ரஜ்விர்சிங் எம்.பி

முன்னாள் அமைச்சர் யஸ்வந்த சின்காவின் மகன் ஜெயந்த் சின்கா முன்னாள் அமைச்சர்

கர்நாடகா முதலமைச்சர் எடியூரப்பா மகன் ராகவேந்திரா எம்.பி

முன்னாள் அமைச்சர் தேபேந்திர பிரதானின் மகன் தர்மேந்திர பிரதான் மத்திய அமைச்சர்...

# மோடியின் குடும்பத்தைப் பற்றி தேடி கண்டடைந்த சில சுவாரஸ்யமான தகவல்கள்

1.சோமாபாய் மோடி (75 வயது) ஓய்வு பெற்ற மாநில சுகாதாரத் துறை அதிகாரி – தற்போது குஜராத்தில் மாநில பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர்.

2.அமிர்தபாய் மோடி (72 வயது) முன்பு ஒரு தனியார் தொழிற்சாலையில் பணிபுரிந்தவர், தற்போது அகமதாபாத் மற்றும் காந்திநகரில் மிகப்பெரிய ரியல் எஸ்டேட் தொழிலதிபர்.

3.பிரஹ்லாத் மோடி (64 வயது) ஒரு ரேஷன் கடை வைத்திருந்தவர், தற்போது இவர் வசம் ஹூண்டாய், மாருதி மற்றும் ஹோண்டா ஃபோர் வீலர் ஷோ ரூம்கள் வதோதரா மற்றும் அகமதாபாத்தில் உள்ளன.

4.பங்கஜ் மோடி (58 வயது) முன்னதாக மாநில தகவல் துறையில் வேலை செய்தவர்.இன்று சோமா பாய் உடன் மாநில பணியாளர் தேர்வாணையத்திற்கு துணைத் தலைவராக உள்ளார்

மேலே உள்ள நால்வரும் மோடியின் உடன் பிறந்த சகோதரர்கள்.

5.போகிலால் மோடி (67 வயது) முன்னாள் மளிகைக் கடையின் உரிமையாளர். இன்று அகமதாபாத், சூரத் மற்றும் வதோதராவில் உள்ள ரிலையன்ஸ் மாலின் உரிமையாளர்

6.அரவிந்த் மோடி (64 வயது) முன்பு ஒரு காயலான் கடை உரிமையாளர். இப்போது ரியல் எஸ்டேட் மற்றும் பெரிய கட்டுமான நிறுவனங்களுக்கு எஃகு சப்ளை செய்யும் ஒப்பந்தக்காரர்.

7.பாரத் மோடி (55 வயது) ஒரு பெட்ரோல் பம்பில் வேலை செய்து கொண்டிருந்தார். இன்று அகமதாபாத்தில் அகியராஸ் பெட்ரோல் பம்ப் ஓனர்.

8.அசோக் மோடி (51 வயது) மளிகைக் கடை வைத்திருந்தவர். இன்று அவர் ரிலையன்ஸ் நிறுவனத்தில் போகிலால் மோடியுடன் பங்குதாரராக உள்ளார்.

9.சந்திரகாந்த் மோடி (48 வயது) ஒரு கௌசாலாவில் மாடு போடும் சாணி பொறுக்கும் பணிபுரிந்து வந்தார். இன்று அவருக்கு சொந்தமாக காந்திநகர் மற்றும் அகமதாபாத்தில் ஒன்பது பெரிய பால் உற்பத்தி மையங்கள் உள்ளன.

மேலே கண்ட ஐந்து பேரும் மோடியின் அங்காளி பங்காளிகள்

10.ஆசிரியராகப் பணிபுரிந்த ரமேஷ் மோடி (57 வயது), இன்று ஐந்து பள்ளிகள்,3 பொறியியல் கல்லூரிகள், ஆயுர்வேதம், ஹோமியோபதி, பிசியோதெரபி கல்லூரிகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளுக்கு ஏக போக முதலாளி.

**மோடியின் மாமா மகன்.**

11.மாநில கல்வி மையத்தில் பணிபுரிந்த பார்கவா மோடி (44 வயது) மேலே குறிப்பிட்ட ரமேஷ் மோடியின் நிறுவனங்களில் முக்கியமான பங்குதாரர்

12.பிபின் மோடி (42 வயது) அகமதாபாத் நூலகத்தில் பணிபுரிந்தவர். இன்று எல்.கே.ஜி முதல் பன்னிரண்டு வகுப்பு வரையிலான பள்ளி புத்தகங்களை வழங்கும் புத்தக வெளியீட்டு நிறுவனத்தில் முக்கிய பங்குதாரர்.

மேலே உள்ள இருவரும் பிரதமர் மோடியின் சொந்த இளைய மாமா ஜயந்திலால் மோடியின் பிள்ளைகள்.

மீடியாக்களின் ஆக பச்சையான அயோக்கியத்தனம் இது தான். மோடியின் உறவினர்கள் பற்றி இது வரை அவர்கள் வாய் திறந்தது கிடையாது. கேவலத்திலும் கேவல மாக ஆட்டோவில் செல்லும் மோடியின் சகோதரர் என்று செய்தி வெளியிட்டு மக்களை ஏமாற்றி சுய இன்பம் அடைவார்கள். ஆனால் அவர்கள் அனைவரும் மில்லிய னர்கள் மற்றும் சிலர் பில்லியனர்கள். காலம் மாறி விட்டது. அவர்கள் மறைக்க நினைத்ததை சோசியல் மீடியா வெளிக்கொண்டு வரும்.



# உண்மையான விதை எண்ணெய்?

சென்ற வாரம் என் நண்பர் ஓமான் நாட்டிற்குச் சென்றார். அவர் சென்றது ஒரு எண்ணெய் கம்பெனியின் வியாபாரத் தொடர்புக்கு. அவருடன் சென்றவர்கள் அது ஒரு ஹைட்ரோகார்பன் தொழிற்சாலை என்று கூட்டிச் சென்றார்கள். அவரும் சோஹார் தாண்டி அபுதாபி திசையில் ஒரு ஊருக்கு அழைத்துச் செல்லப் பட்டார்.

அவர்கள் கூறிய படியே அது ஒரு ஹைட் ரோகார்பன் தொழிற்சாலைதான்! அந்த தொழிற் சாலையின் பொருள் உற்பத்தியைக் கேட்ட போது நண்பர் மயக்கம் போடாத குறைதான்! ஆம்! அந்தத் தொழிற்சாலையில் குரூட் ஆயிலை உபயோகப்படுத்தி ஹெக்சென் கழிவில் ஒரு ஆயிலை தயாரிக்கிறார்கள்.

சரி அதனால் என்ன?. அது நிறமற்ற, மணமற்ற அடர்த்தி குறைவான ஒரு பொருள். மூச்சை இழுத்துப் பிடியுங்கள்... இங்கேதான் விஷயம்! இந்தப் பொருளைத் தான் நாம் தினம் வாங்கும் சூரியகாந்தி எண்ணெய் , ரீபைண்ட் கடலை எண்ணெய் சனோலா எண்ணெய் என்று பெயரிட்டுள்ள அனைத்து பிரபல எண்ணெய் களிலும் 70 சதவீதம் கலக்கிறார்கள்!. இது அமெரிக்கா வின் FDA வால் ஏற்றுக் கொள்ளப் பட்டதல்ல !. இந்தியாவில் இது குறித்த எந்த ஸ்டேண் டர்டும் இருப்பதாகக் கூட தெரியவில்லை!

ஆகவே இது வரை நாம் உபயோகித்து வந்த எண்ணெய் டீசலை விட சற்றே அதிகமாக சுத்திகரிக்கப் பட்ட ஒரு எண்ணெய். அதனால்தானோ என்னவோ கிலோ 70 ரூபாய்க்கு கிடைக்கிறது. இந்தியாவின் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைக் கொண்டு நாடு முழுவதும் உள்ள சந்தைக்கு விற்று தன்னிறைவை எட்ட முடியுமா? அது பற்றி இந்திய எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை நோக்கிய போது அது 25%30% வரையே உற்பத்தி நடக்கிறது எனும் உண்மையும் தெரிந்தது. பால்ம் ஆயில் என சொல்லி இந்த கழிவுகளை இறக்குமதி செய்து கலக்கின்றனர்.

ஆகவே எண்ணை வியாபாரிகள் இந்த குரூட் எண்ணையை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி மக்களுக்கு எந்த விழிப்புணர்வும் இல்லாமல் புத்தியை மழுங்கடிக்கச் செய்து விட்டார்கள். எண்ணெய் சந்தை. தமிழகத்தில் எண்ணெய் சந்தை மதிப்பு ரூ 4100 கோடி ரூபாய். பெட்ரோலிய எண்ணெயில் சமையல் செய்து சாப்பிட்டு ஆரோக்யம் பற்றி பேசி என்ன பயன்..? எனவே.... தயவு செய்து இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்! நமது சந்ததிகளைக் காக்க இதுவே கடைசி தருணம்!.??

உண்மையான செக்கு எண்ணெய் விலை அதிகம் என்றாலும் அதையே உபயோகியுங்கள். உண்மையான விவசாயிகளை வாழ வைத்த புண்ணியமும் உங்களுக்குக் கிடைக்கும். பிராண்டட் ஆயில் எதையுமே வாங்கி ஏமாறாதீர்கள். டிவியை பார்த்து நம்பி வாங்கியது இனி போதும். அதே போன்று வெள்ளைச் சர்க்கரை என்ற எமனையும் வீட்டிற்குள்ளேயே விட வேண்டாம். நாட்டுச் சர்க்கரைக்கு மாறிடுவோம்.

**பகிரிப்பதிவு.**



1940களில் ஒரு வடமாநில இளைஞன் ஆங்கிலேய நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகிறான்.

சுதந்திரம் கேட்டுப் போராடினாயா "நீதிபதி கேட்கிறார்."

இல்லை, நான் போராடவில்லை என்னை விட்டு விடுங்கள் என்று சொன்னவன் அத்தோடு நிற்கவில்லை, இவர்கள்தான் போராடினார்கள் என்று போராளி களையும் காட்டிக்கொடுக்கிறான்!

அதே காலகட்டத்தில் தெற்கே தமிழகத்தில் விடுதலைப் போரில் பங்கேற்ற ஒரு இளைஞனை காவல் துறை கைது செய்கிறது!

சிறையில் வைத்து சித்ரவதை செய்கிறார்கள். எத்தனையோ கொடுமைகளுக்குப் பிறகும் அவனிட மிருந்து எதையும் பெற முடியவில்லை. போராளிகள் ஒருவரைக்கூட அவன் காட்டிக்கொடுக்கவில்லை!

கோபத்தின் உச்சத்தில் அதிகாரி ஒருவன் அந்த இளைஞனின் மீசையை தன் கையிலிருந்த சிகெரெட் டால் சுட்டுக் கருக்குகிறான். அந்த இளைஞனின் நெஞ்சுறுதியை குலைக்க முடியவில்லை. தண்டனை வாங்கிக் கொண்டு, விடுதலை கனல் நெஞ்சில் எறிய சிறை புகுகிறான் அந்த இளைஞன்!

நாடு விடுதலை அடைகிறது...!

50 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தமண்ணில் தேர்தல் நடக்கிறது. அன்று காட்டிக் கொடுத்த அந்த வடநாட்டு இளைஞன் இந்தியாவின் பிரதமர் ஆகிறார். அந்த வடநாட்டு இளைஞன் வாழ்வின் எல்லா வசதிகளையும் அனுபவிக்கிறார்.

இவரோ, துறவி போல மக்கள் நல அரசியலை இன்றைக்கும் முன்னெடுத்துப் போராடுகிறான்.

அவர், ஒரு குறிப்பிட்ட வயதோடு அரசியல் போதும் என்று ஓய்வெடுத்துக் கொள்ளப் போகிறார். இவரோ, மரணிக்கும் வரையும் ஓய்வு கிடையாது என்று சொல்லி, மண்ணின் வளம் கொள்ளை போவதையும், நதிகளை மீட்கவும் காலம் பார்க்காமல் இன்றைக்கும் ஓடி ஓடி உழைக்கிறார்!

90 வயது முடியும் போது, ஓய்வில் இருக்கும் அந்த வடநாட்டு இளைஞனுக்கு "பாரத ரத்னா" விருது கிடைக் கிறது! இந்த தமிழ்நாட்டு இளைஞனுக்கு பிழைக்கத் தெரியாதவன் என்னும் பழிச்சொல் பரிசாகக் கிடைக்கிறது!

இதுதான் இந்தியாவின் அரசியல்! தர்மம் வெல்லும்...

1924 டிசம்பர் 25ஆம் நாள் பிறந்தவர் அந்த வட நாட்டு இளைஞர். 1925 டிசம்பர் 26ஆம் நாள் பிறந்தவர் இந்தத் தென்னாட்டு இளைஞர்.

அவர் அடல் பிகாரி வாஜ்பாய்...

இவர் அருமை அய்யா நல்லகண்ணு!!!

அன்று அவர் தேசத் துரோகி, இவர் விடுதலைப் போராட்ட தியாகி.

இன்று அவர் தேசபக்தர்... இவர் தேச விரோதி!!

பாரத் மாத்தாக்கி ஜே!!

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்

தீரா இடும்பை தரும். குறள் 510


**குறள் விளக்கம் :**

ஒருவனை ஆராயாமல் தெளிவடைதலும், ஆராய்ந்து தெளிவடைந்த ஒருவனிடம் சந்தேகம் கொள்வதும் நீங்காத துன்பத்தைத் தரும்.

பக்தருக்கும் பதருக்கும் வித்தியாசம் கண்டு பிடிக்க தெரியாத தேசம், தியாகங்களை மதிக்கத் தெரியாத தேசம் அல்லலுறும், அழிந்து போகும்

**பகிரியிலிருந்து...**

# இந்தியாவின் அரசியல்



# காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயிலில் இருந்தபோது நடந்தவை



சங்கரராமன் கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு, வேலூர் மத்தியச் சிறைக்குக் கைதியாகக் கொண்டு வரப்பட்டு என் முன் நிற்க வைக்கப்பட்டார் ஜெயேந்திரர்.

கண்கள் இரண்டும் உக்கிரத்தில் சிவந்திருந்தன. கோபம், வருத்தம், இயலாமை, அவமானம் என உணர்ச்சிகளின் பிழம்பாக தண்டத்தைக் கையிலேந்தி நின்றார். கண்களில் கண்ணீர் முட்டியது. அழுதால் அசிங்கமாகி விடும் என்று அதைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தார்.

இந்து மதத்தின் ஒப்பற்ற தலைவர் ஜெகத்குரு, இப்போது ஒரு சிறைக்கைதி. நான் நின்றுகொண்டு அவரை அமரச் சொன்னேன். அவர் அமரவேயில்லை. ஜனாதிபதியின் இருக்கையில் அமர்ந்தவர், என் முன்னே நின்றுகொண்டே பேசினார்.

இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் அவரைக் கொட்டடியில் அடைக்க வேண்டும். திடீரென அவர் சிறைக்குக் கொண்டுவரப்பட்டதால், அவருக்கு எந்தச் சிறப்பு முன்னேற்பாடும் செய்யவில்லை. அரசியல் கைதிகள் அதிக எண்ணிக்கையில் வரும்போது, அவர்களை அடைப்பதற்காக 20 ஏக்கர் பரப்பளவுள்ள 'குளோஸ்டு ப்ரிஸன்' (Closed Prison) தொகுதி இருந்தது. அது, நீண்ட நாள்களாக யாரும் அடைக்கப்படாமல் புதர் மண்டிக்கிடந்தது.

அந்தத் தொகுதியையே அவருக்கு ஒதுக்க முடிவு செய்தேன். ஆயிரம் கைதிகளை உடனே அந்த வளாகத்துக்கு அனுப்பி, இரண்டே மணி நேரத்தில் சுத்தமாக்கினேன். தண்ணீர் மற்றும் மின்சார வசதிகள் செய்யப்பட்டன. போலீஸ் இன்ஸ்பெக்டர் அந்தஸ்திலுள்ள இரண்டு அதிகாரிகள் தலைமையில் 40 காவலர்கள் கொண்ட ஒரு குழு ஏற்பாடு செய்யப்பட்டு, இரவு பகலாகப் பாதுகாக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இத்தனை ஏற்பாடுகளையும் செய்துவிட்டு அந்தத் தொகுதிக்குப் போகச் சொன்னபோது, அவர் என்னிடம் சொன்ன வார்த்தை, என்னை அதிரவைத்தது... "நான் இனி உயிரோடு இருக்கப் போவதில்லை. இவ்வளவு

பெரிய அவமானத்தைச் சகித்துக்கொண்டு உயிர் வாழ எனக்கு விருப்பமில்லை. உண்ணா நோன்பு இருந்து உயிரை மாய்த்துக்கொள்ளப் போகிறேன்!" என்றார்.

என் மனதில் தோன்றியதை நான் பேசினேன்...

"நீங்கள் முற்றும் துறந்த துறவிதானே... உங்கள் பார்வையில், உள்ளே இருந்தால் என்ன, வெளியுலகில் இருந்தாலென்ன? இரண்டும் ஒன்றுதானே. கடவுள் ஒரு சில நாள்கள் உங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கச் சொல்கிறார். சிறையைவிடப் பாதுகாப்பான இடம் வேறு ஏதும் இல்லையே!" என்றேன்.

அவர் சற்றே நிதானித்துவிட்டுப் பேசினார்...

''என்னதான் எல்லாவற்றையும் துறந்தாலும் எனக்கென்று சில கடமைகள் இருக்கின்றன. லோக க்ஷேமத்துக்காக பூஜை செய்யாமல் சாப்பிடக் கூடாது. நான் நினைத்தவாறு சிறைக்குள் பூஜை செய்ய முடியுமா?" என்று கேட்டார். "உங்கள் பூஜைக்கான ஏற்பாடுகளை நான் செய்கிறேன்" என்றேன். "பூஜை செய்ய தனி இடம் வேண்டும்" என்றார். "கொடுக்கிறேன்" என்றேன்.

"சிறையில் கொடுக்கப்படும் உணவை என்னால் சாப்பிட முடியாது; என் ஆசாரப்படி என்னுடைய உணவு ஒரு பிராமணரால்தான் சமைக்கப்பட வேண்டும், கிணற்று நீர்தான் அருந்துவேன்" என்றார். "அனைத் துக்கும் ஏற்பாடு செய்கிறேன்" என்றேன். அவர் எதைக் கேட்டாலும், செய்து கொடுக்கும் மனநிலையில் தான் நானிருந்தேன்.

தண்டனைக் கைதியாக இருந்த ஒரு பிராமணக் கைதியால் அவருக்கு உணவு சமைக்கப்பட்டு, எனது பரிசோதனைக்குப் பிறகு அவருக்கு வழங்கப்பட்டது. காலையில் அரை லிட்டர் ராகிக்கஞ்சி, மதியம் 500 கிராம் தயிர்சாதம் அல்லது எலுமிச்சை சாதம். இரவு மூன்று பூரி, 200 மி.லி பால்... அவருடைய ஒரு நாள் மொத்த உணவும் இவ்வளவுதான்! இதைச் செய்து கொடுக்க முடியாதா ஒரு சிறைக் கண்காணிப்பாளரால்?

எல்லாவற்றையும்விட அவருடைய பாதுகாப்புக்கு நான் பெரிதும் கவனம் செலுத்தினேன். அதற்குக் காரணம் உண்டு. அவரைச் சிறைக்கு அனுப்பிய பிறகு, அவரைப் பாதுகாப்பது குறித்து எந்த ஓர் அறிவுறுத்தலும் அரசுத் தரப்பிலிருந்து எனக்கு வரவில்லை. ஆனால், வெளியிலிருந்து பலரும் அவரைப் பத்திரமாகப் பாதுகாக்கச் சொல்லி என்னிடம் தொலைபேசியில் பேசினார்கள்.

அதில் நான் எதிர்பாராத ஒருவரிடமிருந்து அழைப்பு வந்தது. ஜெயேந்திரரின் பாதுகாப்புக்கு நான் அவ்வளவு மெனக்கெட்டதற்கு அவர் பேசியதும் மிக முக்கியக் காரணம்.

**''சிறையில் கொடுக்கப்படும் உணவை என்னால் சாப்பிட முடியாது; என் ஆசாரப்படி என்னுடைய உணவு ஒரு பிராமணரால்தான் சமைக்கப்பட வேண்டும், கிணற்று நீர்தான் அருந்துவேன்'' என்றார்.**

**''அனைத் துக்கும் ஏற்பாடு செய்கிறேன்'' என்றேன். அவர் எதைக் கேட்டாலும், செய்து கொடுக்கும் மனநிலையில் தான் நானிருந்தேன்.**

ஜெயேந்திரரை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளச் சொல்லி எனக்குத் தொலைபேசியில் அன்புக்கட்டளைபோட்டவர் , கலைஞர் .

அவர்தான் என்னிடம் பேசி, "அவரை பத்திரமாகப் பார்த்துக்கொள். எங்களுக்குள் கொள்கை முரண்கள் இருந்தாலும், அவர் ஏராளமான மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருப்பவர்.

அதனால் அவரைக் காக்க வேண்டியது அவசியம். அது மட்டுமன்றி அவருக்கு ஏதாவது ஒரு பாதிப்பு ஏற்பட்டாலும், அது கொள் கைக்கு முரணானவர்கள் செய்த காரியமாகக் கருதப் படவும் வாய்ப்புண்டு. அதில் உன் பெயரும் பழுதாகி விடும்!" என்று எச்சரித்தார்.

ஓர் இந்துமதத் துறவியை, ஜனாதிபதி இருக்கையில் அமரவைத்து அழகு பார்க்கிறார் ஓர் இஸ்லாமியர். அவரை பத்திரமாகப் பார்த்துக்கொள்ளச் சொல்லி வேண்டுகோள்விடுக்கிறார் பகுத்தறிவு பேசும் அரசியல் தலைவர்.

ஆனால், இந்து மதத்தில் தீவிரமான பற்றும் பக்தியும் கொண்ட ஒருவரின் ஆட்சியில் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். 'வேற்றுமையில் ஒற்றுமைதான் நம் தேசமோ...' என்று தோன்றியது எனக்கு.

**ஜி.ராமச்சந்திரன்** ஓய்வுபெற்ற டி.ஐ.ஜி ,
சிறைத்துறை

சமூக வலைத்தளங்களை ஒரு பிரச்சார சாதனமாக பயன்படுத்துவதில் பாரதிய ஜனதா கட்சி அடைந்திருக்கும் நிபுணத்துவம் யாரும் அறியாத இரகசியம் அல்ல. தேர்தல் பிரச்சாரங்கள் மட்டுமின்றி தனது அரசியல் எதிரிகளை நிலைகுலையச் செய்யவும், மத ரீதியில் ஒரு சமூகப் பிளவை ஏற்படுத்தவும் மிகப் பெரியளவில் மையப்படுத்தப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட இணைய கூலிப்படையை பாரதிய ஜனதா பயன்படுத்தி வருவதை பல்வேறு சந்தர்ப்பங்களில் பலர் விரிவாக எழுதியுள்ளனர். இது குறித்து பத்திரிகையாளர் ஸ்வாதி சதுர்வேதி புலனாய்வு செய்து நூல் ஒன்றையும் எழுதி உள்ளார் (I Am a Troll: Inside the Secret World of the BJP's Digital Army).

வேர்மட்ட அளவில் கட்சி இயந்திரமும் அதற்கு இணையான அளவிற்கு ஒருங்கமைந்த சமூக ஊடக வலைப்பின்னலும் கொண்டு பாரதிய ஜனதா ஈட்டியிருக்கும் வெற்றிகள் ஏராளம். கடந்த காலங்களில் தேர்தலை ஒட்டி சமூக ஊடகங்களில் பொய்ச் செய்திகளையும் வதந்திகளையும் பரப்பி, அதன் மூலம் கலவரங்களை உண்டாக்கி, ஓட்டுக்களை அறுவடை செய்து அக்கட்சி தேர்தல் வெற்றிகளை அடைந்திருப்பதற்கு முசாஃபர்நகர் கலவரங்கள் எடுப்பான உதாரணம். எனினும், இந்த உத்தி இது வரை எல்லா காலங்களிலும் எல்லா இடங்களிலும் அக்கட்சிக்கு உத்திரவாதமான வெற்றியை பெற்றுக் கொடுத்ததாகவும் சொல்ல முடியாது. தமிழ்நாடு, கேரளம், மேற்கு வங்கம், பஞ்சாப் போன்ற மாநிலங்கள் இது நாள் வரை பா.ஜ.கவின் தந்திரங்களுக்கு பலியாகாமல் தப்பி வருகின்றன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலை ஒட்டி ஆண்டாள் விவகாரத்தையும் சுயமரியாதைத் திருமண நிகழ்வு ஒன்றின் போது ஸ்டாலின் பேசியதையும் கையிலெடுத்தது பாரதிய ஜனதா. அந்தப் பிரச்சாரங்கள் பெருமளவிற்கு எடுபடவில்லை என்பதை தேர்தல் முடிவுகளே காட்டின. எனினும், தன் முயற்சியில் சற்றும் மனந்தளராத பாரதிய ஜனதா, எதிர்வரும் தமிழக சட்டமன்றத் தேர்தலை குறிவைத்து மீண்டும் ஒரு முறை தனது ஆயுதங்களை தமிழகத்தின் மீது பரிசோதித்து பார்க்க முடிவு செய்துள்ளது.

இந்தப் பின்னணியில் கடந்த ஜூலை மாதம் தமிழ் நாடு பாரதிய ஜனதாவின் சமூக ஊடகப் பிரிவினர் ட்விட்டரில் முன்னெடுத்த மூன்று ஹேஷ்டேகுகள் குறித்து EPW பத்திரிகையில் வெளியான கட்டுரை ஆய்வு செய்கிறது. (https://www.epw.in/journal/2020/44/commentary/bjps-twitter-experiments-and-tamil-resilience.html)

நியூஸ்18 தொலைக்காட்சியில் பணிபுரிந்து வந்த குணசேகரனை குறிவைத்தும், கருப்பர் கூட்டம் யூட்யூப் சேனலில் கந்த சஷ்டி கவசம் குறித்து வெளியான வீடியோ ஒன்றுக்கு எதிராகவும், பெரியார் சிலை அவமரியாதை செய்யப்பட்டதை ஆதரித்தும் சமூக வலைத்தள பிரச்சாரங்களை முன்னெடுத்தது பாரதிய ஜனதா. இம்மூன்று விவகாரங்களிலும் தனித் தனியே ஹேஷ்டேகுகளை வைரல் ஆக்கினர் அக்கட்சியின் இணைய கூலிப்படையினர். இவை குறித்து வைரலான




# தமிழ் டிவிட்டர் வலதுசாரியா இடதுசாரியா?

மூன்று ஹேஷ்டேகுகளான #WellDoneNews18, #VetrivelVeeravel மற்றும் #Periyaravadhu_Mayiravadhu, EPW கட்டுரை ஆய்வு செய்கிறது.

இம்மூன்று ஹேஷ்டேகுகள் ஒவ்வொன்றிலும் தனித்தனியே மொத்தம் எத்தனை ட்வீட்டுகள் வந்தன (நேரடி பதிவுகள்), எத்தனை முறை ரீட்வீட் செய்யப்பட்டன (ஒருவரின் பதிவை இன்னொருவர் மறுபகிர்வு செய்வது), மொத்தமாக எத்தனை ட்விட்டர் பயனர் கணக்குகளில் இருந்து பதிவுகள் வெளியாகின, எத்தனை பயனர் கணக்குகள் மறுபகிர்வு செய்தன என்பவற்றை கட்டுரையாளர்கள் துல்லியமாக பதிவு செய்துள்ளனர். மேலும், இம்மூன்று ஹேஷ்டேகுகளிலும் யாரெல்லாம் பங்கேற்றனர், மூன்றிலும் பங்கேற்ற பொதுவான நபர்கள் குறித்த விவரங்களையும் ஆய்வு செய்துள்ளனர். இந்த ஆய்வில் சில சுவாரசியமான முடிவுகள் கிடைத்துள்ளன.

குணசேகரனுக்கு எதிராக சுமார் 1284 ட்விட்டர் கணக்குகளில் இருந்து 24,794 மறுபகிர்வுகள் செய்யப்பட்டுள்ளன. பெரியாரை இழிவு படுத்த 3,267 ட்விட்டர் கணக்குகளின் மூலம் 43,768 மறுபகிர்வுகள் செய்யப்பட்டுள்ளன. வெற்றிவேல் வீரவேல் (கருப்பர் கூட்டத்தை எதிர்த்து) 1971 கணக்குகளின் மூலம் 10,371 மறுபகிர்வுகள் செய்யப்பட்டுள்ளன. இவை 2020 ஜூலை 10 முதல் 20ம் தேதி வரையிலான கணக்கீடு.

இதில் பெரியாருக்கு எதிரான பிரச்சாரம் விரிவாக செய்யப்பட்டுள்ளதை எடுத்த எடுப்பிலேயே புரிந்து கொள்ளலாம். எனினும், முருகன் தொடர்பான பிரச்சாரத்திலும் குணசேகரனுக்கு எதிரான பிரச்சாரத்திலும் பாரதிய ஜனதாவின் இணையக் கூலிகளுடன் அதிமுகவின் ஐ.டி விங் ஆட்களும், கட்சி சார்பற்ற வலதுசாரிகளும், பா.ம.கவினரும், ரஜினிகாந்த் ரசிகர்களும் கூட்டு சேர்ந்து கொண்டனர். பெரியாருக்கு எதிரான அவதூறு பிரச்சாரத்தை கட்சிசார்பற்ற வலதுசாரிகள் முன்னின்று நடத்த அதில் பாரதிய ஜனதாவின் இணைய கூலிகளும் பகுதியளவுக்கு அதிமுக ஆதரவாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இம்மூன்றையும் தொகுப்பாக பார்க்கும் போது குணசேகரனுக்கு எதிராக நடத்தப்பட்ட அவதூறு பிரச்சாரத்திற்கு பரவலான ஆதரவு கிட்டியுள்ளது (அதாவது பா.ஜ.க, அதிமுக, பாமக மற்றும் ரஜினி ரசிகர்களின் ஆதரவு)

**இந்த பிரச்சாரங்களின் மூலம் பாரதிய ஜனதா சாதிக்க நினைப்பது என்ன?**

முதலில் திராவிட இயக்கத்தின் சமூக நீதி, சம வாய்ப்பு, சுயமரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் உருவாகியிருக்கும் தமிழ் அடையாளத்தை உடைத்து 'ஹிந்துதமிழர்கள்' என மதரீதியிலான ஒரு அடையாளப் படுத்தலை உருவாக்க நினைக்கிறது பாரதிய ஜனதா. இந்த புதிய அடையாளத்தினுள் ஏற்கனவே திராவிட ஆட்சியின் விளைவாக பலனடைந்த இடைநிலைச் சாதிகளின் மேல்தட்டு வர்க்கத்தினரையும், சமூக நீதியால் பலனடையாத சாதியினரையும் வளைத்துக் கொள்வது பா.ஐ.கவின் திட்டம்.

சமூக வலைத்தளங்களில் உருவாக்கப்படும் ட்ரெண்டுகள் அனைத்தும் மெய் உலகப் பிரச்சனைகளைப் பிரதிபலிப்பவை அல்ல. அவை உருவாக்கப்படுபவைதான். தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஊடகங்கள் வாயிலாக தனது நோக்கத்துக்கு ஏற்ற வண்ணம் அரசியல் நிகழ்ச்சி நிரலை ஒருபுறம் பாஜக தீர்மானிக்கிறது. எனினும் அவ்வாறு மேலிருந்து அதிகாரத்தின் வாயிலாகத் திணிக்கப்படும் விசயங்களுக்கு நம்பகத்தன்மை ஏற்படுத்திக் கொடுக்கும் தேவை இருக்கிறது. அதற்கு சுதந்திரமானவை போலத் தோன்றுகின்ற சமூக ஊடகங்களை பாஜக பயன்படுத்துகிறது.

ணிறிகீ பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தலைப்பு நம் கவனத்துக்குரியது. பிற மாநிலங்களைப் போல அல்லாமல், தமிழகத்தின் சமூக ஊடகச் சூழல் சங்கிகளின் பிரச்சாரத்தை எதிர்கொண்டு முறியடிக்கிறது என்ற பொருளில் tamil resilience என்ற சொல்லை இக்கட்டுரை தனது தலைப்பாகக் கொண்டிருக்கிறது.

இது குறிப்பிட்ட அளவுக்கு உண்மைதான் எனினும், ட்விட்டர் டிரெண்டிங் அளிக்கும் மயக்கத்திற்கு பலியாகாத எச்சரிக்கை உணர்வும் நமக்குத் தேவை. பாஜகவின் தோல்வியை நமது வெற்றியாகக் கருதிக் கொண்டுவிட முடியாது. தமிழ் நாட்டின் சமூக வலைத்தளங்கள் உண்மையில் எப்படி இருக்கின்றன என்பதை அகச்சாய்வின்றி ஆராய்ந்து பார்க்க வேண்டியிருக்கிறது.

2019ம் ஆண்டு செப்டம்பர் மாத வாக்கில் இந்தியாவில் இணையப் பயன்பாட்டு வசதி கொண்டோரின் எண்ணிக்கை 45.1 கோடி என்பதை இந்திய இணையம் மற்றும் செல்பேசி கழகமும் (Internet and Mobile Association of India (IAMAI) ஏ.சி நீல்சன் நிறுவனமும் இணைந்து வெளியிட்ட ஆய்வறிக்கை கூறுகின்றது. இதில் நகர்புறங்களைச் சேர்ந்தவர்களில் 72 சதவீதம் பேரும் (13.9 கோடி பேர்) ஊரகப் பகுதியைச் சேர்ந்தவர்கள் 57 சதவீதம் பேரும் (10.9 கோடி பேர்) நாள்தோறும் இணையத்தை பயன்படுத்துபவர்கள் என்கிறது மேற்படி அறிக்கை. மொத்த மக்கள் தொகையை எடுத்துக் கொண்டால் 36 சதவீதம் பேர் தான் இணையப் பயன்பாட்டுக்கு அறிமுகம் ஆகியுள்ளனர்.

மாநில வாரியாக எடுத்துக் கொண்டால், தில்லி 69 சதவீத இணையப் பரவலுடன் முதலிடத்தில் உள்ளது.

இதற்கடுத்து கேரளாவில் 54 சதவீதமும், ஜம்மு காஷ்மீர், ஹரியானா, ஹிமாச்சல் மற்றும் பஞ்சாப் மாநிலங்கள் 49 சதவீதமும், தமிழ்நாடு 47 சதவீதமும் மகாராஷ்டிரா 43 சதவீதமும் உள்ளது. ஜியோவின் வருகை இணையப் பரவலை அதிகரித்திருந்தாலும், பெரும்பாலானவர்கள் அலுவலகத்திலோ வீட்டுக் கணினிகளிலோ தான் இணையத்தை பாவிப்பதாக மேற்படி அறிக்கை கூறுகின்றது. மேலும் இணையப் பயன்பாட்டில் 16 வயது முதல் 29 வயது வரையிலானோர் தான் தொடர்ச்சியாக பயன்படுத்துகிறவர்களாக உள்ளனர்.

இந்தப் பின்னணியில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களின் சமூக வலைத்தள பங்கேற்பைப் புரிந்து கொள்ள முயற்சிப்போம். ட்விட்டர் நிறுவனம் கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அந்த ஆண்டில் அதிகம் விவாதிக்கப்பட்ட விசயங்கள் குறித்து ஒரு புள்ளி விவரத்தை வெளியிட்டது.

(https://twitter.com/TwitterIndia/status/1194498907293638656). நாடாளுமன்றத் தேர்தல், 2019ஆம் ஆண்டு உலக கோப்பை கிரிக்கெட், தீபாவளி வாழ்த்து ஆகியவற்றையெல்லாம் முந்திக் கொண்டு முதல் இடத்தைப் பிடித்தது நடிகர் அஜித் குமாரின் விஸ்வாசம் திரைப்படம் குறித்த ஹேஷ்டேக் (#viswasam). இந்த பட்டியலில் நான்காம் இடத்தை தெலுங்கு படமான மகரிஷி பெற்றது.

இந்த ட்வீட்டைத் தொடர்ந்து 2019ஆம் ஆண்டின் சிறந்த படம் குறித்த வாக்கெடுப்பு ஒன்றை ட்விட்டர் இந்திய நிர்வாகமே நடத்தியது. அதில் முதலிடத்தை அஜித்தின் விஸ்வாசமும், இரண்டாம் இடத்தை விஜயின் பிகில் படமும் மூன்றாம் இடத்தை சூர்யாவின் ழிநிரி திரைப்படமும் பெற்றன பதிவான மொத்த வாக்குகள் 2,55,228.

தற்போது 2020ஆம் ஆண்டின் டிவிட்டர் டிரண்டிங் புள்ளி விவரங்கள் வெளிவந்துள்ளன. அதில் இந்திய அளவில் நடிகர் விஜய் தனது ரசிகர்களோடு நெய்வேலியில் எடுத்த செல்ஃபி படம் அதிகம் பேரால் மறு டிவிட் செய்யப்பட்டுள்ளது. கிரிக்கெட் வீரர் கோலி நடிகர் அனுஷ்கா சர்மா தம்பதியினரின் குழந்தை பிறக்குப் போகும் செய்தி டிவிட் அதிகம் பேரால் விரும்பப்பட்டுள்ளன.

இந்த வரிசை தான் தமிழ் பேசும் சமூக ஊடகங்களின் யோக்கியதைக்கு மிகச் சிறப்பான சான்று. அஜித் ரசிகர்களுக்கும் விஜய் ரசிகர்களுக்கும் நடக்கும் ரசிகப் 'போர்கள்' இந்திய அளவில் பிரபலமானவையாகும். இதில் எண்ணிக்கையிலும் ரசிக வெறியிலும் எப்போதும் முதலிடத்தைப் பிடிப்பவர்கள் அஜித் ரசிகர்கள் தான். அதற்கு அடுத்த இடத்தில் விஜய் ரசிகர்களும் மூன்றாம் இடத்தில் சூர்யா ரசிகர்களும் வருகிறார்கள். சமூக ஊடகங்களைப் பொருத்தவரை ரஜினி ரசிகர்கள் எண்ணிக்கையில் சூரியா ரசிகர்களுக்கு இணையாகவோ அல்லது அதற்கு சற்று அதிகமாகவோ இருப்பார்கள். தொடர்ச்சியாக இந்த ரசிகச் சண்டைகளில் எதிர் தரப்பு நடிகரைக் குறித்து ஆபாசமான ஹேஷ்டேகுகளை ஒவ்வொரு தரப்புமே இந்திய அளவில் ட்ரெண்டிங் செய்யும்.

தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ 47 சதவீதம் பேர் தான் இணையத்துக்கு அறிமுகம் ஆனவர்கள். அதிலும் வெகு சில சதவீதம் பேர் தான் தொடர்ச்சியாக இணையத்தைப் பாவிப்பவர்கள். அதிலும் ஒரு சிறிய பிரிவினர் தான் சமூக வலைத்தளங்களில் பங்கேற்கின்றனர். அவ்வாறு பங்கேற்பவர்களில் ஆகப் பெரும்பான்மையினர் ரசிகர்கள். ஆக தமிழ் சமூக ஊடகங்களின் பிரதான பேசு பொருள் சினிமா தான். இதில் நடிகர்களுக்கு அடுத்து இசையமைப்பாளர்களின் ரசிகர் கூட்டங்கள் உள்ளன. யுவன் ஷங்கர் ராஜா, அனிருத், இளையராஜா மற்றும் ரஹ்மான் போன்றோருக்கு (இதே வரிசையில்) 'விசுவாசமான' இணைய ரசிகர் பட்டாளங்கள் உண்டு. இவர்கள் தங்களுக்குள் பெரியளவில் அடித்துக் கொள்ள மாட்டார்கள் என்பது தான் இவர்களுக்கும் ரசிக வெறியர்களுக்குமான ஒரே வேறுபாடு.

சமூக வலைத்தளங்களில் உள்ள ரசிகப் பிரிவினரில் அஜித் ரசிகர்கள் பொதுவாக சாதி மத வெறி கொண்ட அடிப்படைவாதிகளாக தங்களை வெளிப்படுத்திக் கொள்கின்றனர் விதிவிலக்குகள் இருக்கலாம். அதே போல் விஜய் மற்றும் சூர்யா ரசிகர்கள் தமிழ் உணர்வு, நீட் எதிர்ப்பு, மோடி எதிர்ப்பு, இந்தி திணிப்பு எதிர்ப்பு, இட ஒதுக்கீடு ஆதரவு, சாதி மத வெறி எதிர்ப்பு உள்ளிட்ட பொதுப் பிரச்சினைகளில் கலந்து கொள்வர் இதிலும் விதிவிலக்குகள் இருக்கலாம்.

சாதி, மதம் மற்றும் சமூகம் தொடர்பான பிரச்சனைகள் வரும்போது மேற்படி ரசிகர்கள் என்ன விதமான கருத்துகளைத் தெரிவிக்கிறார்கள் என்பதை அவதானித்ததிலிருந்து இவ்வாறு கூற முடிகிறது. சம்மந்தப்பட்ட நடிகர்கள் மேற்சொன்னவாறு அரசியல் பேசுவதனால், இவர்கள் அந்த நடிகர்களின் ரசிகர்களாக இல்லை. மாறாக மெய் உலகில் நிலவும் சாதி உள்ளிட்ட பல காரணிகள் இந்த மெய்நிகர் உலக அணிசேர்க்கைக்கு காரணமாக அமைகின்றன.

இதற்கடுத்ததாக, பாலியல் ஆபாச பதிவுகளைப் பார்ப்பதற்கென்றே இணையத்தை பயன்படுத்தும் ஒரு பிரிவினரும் உண்டு. இரசிகர்கள் உள்ளிட்டு எல்லா பிரிவினரும் கணிசமான நேரத்தை இதில் செலவழிக்கின்றனர். இவற்றையெல்லாம் தாண்டி வருவது தான் அரசியலை மட்டும் பிரதானமாக பேசும் ஒரு மிகச் சிறிய பிரிவினர்.

*ஒவ்வொரு முறை மோடியோ அமித்ஷாவோ தமிழ் நாடு வரும் போது செய்யப்படும் #ரீஷீதீணீநீளீ ஹேஷ்டேகுகளின் வெற்றிக்கு காரணம் இப்படி பிற விசயங்களுக்காக இணையத்திற்கு வந்தவர்களில் ஒரு பிரிவினர் அதில் ஊக்கத்தோடு பங்கேற்பதால் தான். அதே போல் நீட், இந்தி திணிப்பு எதிர்ப்பு உள்ளிட்ட பொதுவான அரசியல் பிரச்சினைகளுக்காக செய்யப் படும் ஹேஷ்டேகுகளிலும் அரசியல் பேசும் பிரிவின ரைத் தாண்டி மற்றவர்களும் பங்கேற்கின்றனர்.*

*ஆனால் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்ன வென்றால், அரசியல் கட்சிகள் (திமுக பாஜக உள்ளிட்டு) தங்களின் அரசியல் நோக்கங்களுக்காகோ பிரச்சாரத்திற் காகவோ முன்னெடுக்கும் ஹேஷ்டேக் ட்ரெண்டிங்கில் பெரும்பாலும் பிறர் கலந்து கொள்வதில்லை. மோடி அமித்ஷா எதிர்ப்போ இந்தி திணிப்பு நீட் எதிர்ப்போ திமுகவின் தனிப்பட்ட சாதனையாக இல்லை; மாறாக அவை ஒரு பொது நிகழ்வாக இருப்பதால் தான் இந்தளவுக்கு வெற்றி பெறுகின்றது.*

*இந்தப் புரிதலோடு EPW கட்டுரையில் செய்யப்பட் டுள்ள ஆய்வையும் அதன் முடிவுகளையும் நாம் அணுகலாம். சமூக ஊடகங்களில் பாரதிய ஜனதா முன்னெடுக்கும் செயல்பாடுகள் அப்படியே சமூகத்தை பிரதிபலிப்பவை அல்ல; அவர்கள் முன்னெடுக்கும் பிரச் சினைகளுக்கு வலுவான சமூக அடித்தளமும் இல்லை. மாறாக, அக்கட்சி சமூகத்தில் எதை செய்ய உத்தேசித் திருக்கின்றது என்பதை அதன் சமூக ஊடக செயல்பாடு களில் இருந்து நாம் புரிந்து கொள்ள முடியும்.*

*அந்த அடிப்படையில் ஊடகங்கள் மற்றும் அதில் பணிபுரிகின்றவர்கள் பாஜகவுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று பகிரங்கமாக எச்சரிகை விடுத்ததே குணசேகர னுக்கு எதிரான பிரச்சாரம். தமிழகத்தில் பெரியார் திராவிட இயக்கம் தமது செயல்பாடுகளின் மூலம் ஏற்படுத்தி வைத்த தமிழ் அடையாளத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதே பெரியாருக்கு எதிரான பிரச் சாரத்தின் நோக்கம். அடுத்து, “வெற்றிவேல் வீரவேல்“ என்பதன் வாயிலாக “திராவிட இயக்க தமிழ் அடை யாளத்துக்கு எதிராக “தமிழ்இந்து“ அடையா ளத்தை உருவாக்குவது பாரதிய ஜனதாவின் நோக்கம்.*

*மேற்கூறியவை அனைத்தும் நேரடியானவை. புரிந்து கொள்ளத்தக்கவை. இந்த நேரடித் தாக்குதல்களில் பாஜக எதிர்பார்த்த வெற்றியைப் பெற முடியவில்லை. எனவேதான், தமிழ்ச் சமூகத்தில் நிலவுகின்ற விரிசல் களின் (faultlines) மீது பாஜக தனது கவனத்தைத் திருப்பி யிருக்கிறது. இதில் மெத்தனமோ அலட்சியமோ கூடாது.*

***பா. சாரதி***



உலகிலேயே சிசிடிவி கேமராக்கள் அடர்த்தி விகிதத்தில் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 657 சிசிடிவி கேமராக்கள் என்ற எண்ணிக்கையில் சென்னை முதலிடத்தில் உள்ளது. லண்டன் மற்றும் பெய்ஜிங் நகரங்ளை பின்னுக்கு தள்ளி சென்னை முதலிடத்தை பிடித்தது.

இந்த சாதனைக்கு வித்திட்டவர் சென்னை பெருநகர காவல் ஆணையராக இருந்த ஏ.கே.விஸ்வநாதன் தான். அவர் காவல் ஆணையராக இருந்த போது குற்றச் செயல்களை தடுக்க ‘மூன்றாம் கண்‘ என்ற பெயரில் சென்னை மாநகரம் முழுவதும் சிசிடிவி கேமராக்களை பொருத்தும் நடவடிக்கை மேற்கொண்டார்.

இதில் எதிர்பார்த்த பலன் கிடைக்கவே, பொதுமக்கள், வணிகர்கள், தன்னார்வலர்கள் உதவியுடன் மேலும் அதிக அளவில் சிசிடிவி கேமராக்களை பொருத்தும் பணிகளை விரைவுபடுத்தினார்.

அதனுடைய பலனாகவே சென்னையில் குற்றச் செயல்கள் படிப்படியாக குறைந்தது. குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களை கண்டறிந்து விரைந்து கைது நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன. இன்று அதுவே ஒரு சாதனையாக உருமாறி சென்னை காவல்துறைக்கு பெருமை சேர்த்துள்ளது.




**கொள்ளை போகுது அரசுச் சொத்து!**

லாபத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனமான SCI எனப்படும் shipping corporation of India ரூ 2500 கோடிக்கு தனியாருக்கு விற்பனை செய்யப்பட இருக்கிறது. ஆஸ்திரேலியாவிலிருந்து நிலக்கரியையும், மெக்ஸிகோவிலிருந்து கச்சா எண்ணெயையும், ஆப்பிரிக்காவிலிருந்து பருப்பு வகை களையும், Adani-Wilmar நிறுவனத் திற்கு சூரியகாந்தி எண்ணெயையும் SCI கப்பல்களில் கொண்டு வருவதற்கு வாடகை கொடுத்து முடியலயாம்.



பார்ப்பன நம்பூதிரிகள் கேரளாவில் யாரையும் விட்டு வைக்கவில்லை. அவர்கள் போர் மறவர்களான நாயர்களை தரவாடு என்ற குடும்ப அமைப்பைக் கொண்டு இழிவுப்படுத்தி தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டனர்.

அரசர்களிடம் நேரடியாக அது போன்ற ஏற்பாடு செல்லாது என்பதால் அவர்களை "மஹாபலி" கதையை கூறி அரசவம்சத்தினர் அனைவரும் "விஷ்ணு"வின் அடிமைகள் என நம்ப வைத்தனர். அதனால் அரசனின் எல்லா சொத்துக்களும் கோவிலுக்கே சொந்தம் என்று சட்டத்தினை மாற்றினர். அரசன் எந்த செலவு செய்வதென்றாலும் கடவுளிடம் நேரடித் தொடர்பில் இருக்கும் பார்ப்பன நம்பூதிரி ஒப்புதல் இல்லாமல் செய்ய கூடாது. அது மட்டுமல்லாமல் "தம்பிரான்"கள் என்று சொல்லப்படும் அரச குடும்பத்தவர்கள்,

தங்கள் மனைவிகளின் முதல் குழந்தையை மட்டும் கட்டாயம் நம்பூதிரிகளின் தூய்மையான இரத்த சம்பந்தம் மூலமே பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கட்டாயமாக்கினர்.

இதுமட்டுமல்ல அரசனாக ஒரு இளவரசன் முடிசூட்டிக் கொள்ளும் போது தன் பெற்றோர் வைத்த பேரையும் மாற்றிக் கொள்ள வேண்டும். அதன்பின் அவர்களின் பெயர், அவர்களின் பிறந்த நட்சத்திரமாக மட்டும் இருக்கும்! உதாரணமாக "சுவாதி" நட்சத்திரத்தில் பிறந்த இளவரசன், அரசனாக போது அவன் பெயர் "சுவாதி திருநாள்" என்று மாற்றப்படும். ஐந்து அரசர்கள் சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தால் எல்லோரும் சுவாதி திருநாள் தான்,ஆக எந்த அரசன் எந்த நல்லது செய்தான் என்றும் யாருக்கும் தெரியாது.

அரசவம்சம், நம்பூதிரி வம்சம், நாயர் வம்சம் இம்மூன்றையும் தவிர்த்து ஏனைய எல்லா மக்களும் கேரளாவில் தீண்டத்தகாதோர் ஆக்கப்பட்டனர். மற்ற அனைத்து மக்களும் ஆண்களாக இருந்தாலும் பெண்களாக இருந்தாலும், இடுப்பில் இருந்து முழங்கால் வரை மட்டுமே ஆடை அணிய வேண்டும் என்பதை சட்டமாக்கினர். பெண்கள் எப்போதும் திறந்த மார்புடன் தான் இருக்க வேண்டும். ஆண்களில் அரசனையும் நாயர்களையும் தவிர யாரும் மீசை தாடி வைத்துக் கொள்ளக் கூடாது.

செருப்பு அணியக்கூடாது, குடை பிடித்து செல்லக் கூடாது. மீசை தாடி வைத்துக் கொள்ள வேண்டும் என்றால் அதற்கு தனியாக வரி செலுத்த வேண்டும். பெண்கள் மேலாடை அணிந்து மார்பை மறைத்து கொள்ள வேண்டும் என்றால் அதற்கு தனியாக"முக்கியம்" என்ற வரி செலுத்த வேண்டும். அந்த வரி செலுத்தினாலும், பார்ப்பனர் நம்பூதிரிகள் எதிரில் வந்தால் தோள் சீலையை விலக்கி மார்பை காட்டித்தான் நிற்க வேண்டும், வரி செலுத்துவது பார்ப்பனர் அல்லாதோர் முன் மார்பை மறைக்கவே! இந்த கொடுமைகளின் உச்சம். மக்களின் கவனத்துக்கு முதல் முதலில் வெளிவந்தது 19ஆம் நூற்றாண்டில்தான்.

அப்போது கேரளாவில் உள்ள “சேர்த்தலா“ என்ற ஊரில் “நங்கோலி“என்ற “ஈழவா“சாதியை சேர்ந்த பெண் வாழ்ந்தாள். ஒருமுறை நாயர்கள் முலைவரி வசூலிக்க வந்த போது சற்று பொறுங்கள் என்று கூறி உள்ளே சென்றவள், ஒரு தலைவாழை இலையில் (இந்த வரிப்பணத்தை மரியாதையாக வாழையிலையில் வேறு வைத்து கொடுக்க வேண்டுமாம்) தன் இரு முலைகளையும் அறுத்து வைத்து கொண்டு வந்து கொடுத்துவிட்டு மயங்கி விழுந்து இறந்தாள். அதிர்ந்து போன நாயர்கள் அந்த இடத்தை விட்டு ஓடி விட்டனர். பின்னர் அங்கு வந்த அவள் கணவன் “சிறுகண்டன்“ அவளை எரிக்கும் போது அந்த நெருப்பில் தானும் குதித்து தற்கொலை செய்து கொண்டான். கேரளவில் பார்ப்பனரை எதிர்த்து நடந்த முதல் புரட்சி வித்து இதுதான்!

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கேரளாவில் ஆங்கிலேயர்கள் அதிகமான அளவில் இருந்தார்கள்.

இந்த முலை வரி வாங்கும் பார்ப்பனர் தந்திரம் ஆங்கிலேயர்களிடமும் இஸ்லாமியர்களிடமும் செல்லாது,

கேட்டால் இது இந்துமத தர்மம் இவை இந்துக்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று சொல்லி விட்டனர்.

ஆக முலைவரி சட்டம் கி.பி இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கிறித்துவர்களாக இருந்த சிரியன், ஜோனகர் ஆகியோருக்கு பொருந்தாது. மோபில்லா என்று அழைக்கப்படும் இஸ்லாமியரையும் கட்டுப்படுத்தாது. அந்தப் பெண்கள் “குப்பாயம்“ என்று அழைக்கப்படும் நீண்ட கைகளை உடைய ஜாக்கெட்டுகளை அணிந்து வந்தனர். இந்த முலை வரி வாங்கும் பார்ப்பனத் தந்திரம் அவர்களிடம் பலிக்கவில்லை.

அந்த காலக்கட்டத்தில் முழு குமரி மாவட்டம், நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் சில மேற்கு பகுதிகள் திருவாங்கூர் மற்றும் திருவனந்தபுரம் சமஸ்தானத்தில் தான் இருந்தன. அங்கு வாழ்ந்த பெருவாரியான சாணார், நாடார் சாதியைச் சேர்ந்தவர்கள். இவர்களும் இந்த முலைவரியில் சிக்கித்தவித்தனர்.

1813 ல் கர்னல் ஜான் மன்றோ என்ற ஆங்கிலேயர் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பிரிட்டிஷ் தூதுவராக இருந்தார். அவர் திருவிதாங்கூர் அரசனை வற்புறுத்தி பரம்பரை கிறிஸ்துவர் மட்டுமல்ல இனி கிறிஸ்தவராக மாறும் அனைவருக்கும் முலைவரியில் இருந்து விலக்கு அளிக்க சட்டம் கொண்டு வந்தார். உடனே பெருவாரியான சாணார்கள் கிறித்தவ மதத்திற்கு மாறினர்.

**செருப்பு அணியக்கூடாது, குடை பிடித்து செல்லக் கூடாது. மீசை தாடி வைத்துக் கொள்ள வேண்டும் என்றால் அதற்கு தனியாக வரி செலுத்த வேண்டும். பெண்கள் மேலாடை அணிந்து மார்பை மறைத்து கொள்ள வேண்டும் என்றால் அதற்கு தனியாக’’முக்கியம்’’ என்ற வரி செலுத்த வேண்டும். அந்த வரி செலுத்தினாலும், பார்ப்பனர் நம்பூதிரிகள் எதிரில் வந்தால் தோள் சீலையை விலக்கி மார்பை காட்டித்தான் நிற்க வேண்டும், வரி செலுத்துவது பார்ப்பனர் அல்லாதோர் முன் மார்பை மறைக்கவே! இந்த கொடுமைகளின் உச்சம். மக்களின் கவனத்துக்கு முதல் முதலில் வெளிவந்தது 19ஆம் நூற்றாண்டில்தான்.**

ஒருபுறத்தில் சாணார் மக்கள் கிருத்தவத்திற்கு மாறும் போது, குமரி மாவட்டத்தில் சாணார்களில் ஒரு தலைவர் தோன்றினார். அவரது பெயர் வைகுண்டர். மக்கள் அவரை ஐயா வைகுண்டர் என்று அழைப்பார்கள். எம்பெண்களும் குப்பாயம் அணிவார்கள் உன்னால் ஆனதை பார்த்துக்கொள் என்று போராட்டத்தை கையில் எடுத்தார். கேரள மன்னன் படைகள் போராட்டத்தை ஒடுக்குகிறேன் என்ற பெயரில் வன்முறையை கட்டவிழ்த்து விட்டது. ஆண்கள் பெண்கள் அனைவரும் அடித்து துவைக்கப்பட்டனர்.

இறுதியாக 1859இல் சென்னை மாகாணத்தின் கவர்னராக “சார்லஸ் ட்ரெவிலியான்“ கொண்டு வந்த பிரகடனத்தின் படி, கேரள அரசர்கள் சாணார். மக்கள் எந்த மதமாக இருந்தாலும் மேலாடை அணியலாம் என்று சட்டம் கொண்டு வந்தார். அப்போதும் முலைவரி முழுமையாக நீக்கப்படவில்லை.

அப்போதும் கேரளாவில் ஈழவ,முக்கவாட்டிகள் (மீன் பிடிப்போர்) போன்ற பல சாதி மக்கள் அவதி பட்டுக்கொண்டு தான் இருந்தார்கள். ஐயா வைகுண்டரின் பிரச்சாரங்களில் ஈர்க்கப்பட்டவர்கள் கேரளாவில் இருவர். ஒருவர் நாராயணகுரு, மற்றொருவர் ஐயன்காளி. இதில் நாராயணகுரு ஈழவ சாதியை சேர்ந்தவர்.

இந்த ஈழவ சாதி மக்கள் தெருவில் நடந்து செல்ல அனுமதிக்க வேண்டும் என்ற போராட்டத்திற்கு தான் கேரள மக்கள் நமது ஐயா பெரியாரை அழைத்து சென்று போராடி, வெற்றிபெற்று பெரியாருக்குவைக்கம்வீரர் பட்டமும் அளித்தனர்.

நாராயணகுரு, இந்து மதம் முக்கியம், ஆனால் மக்களுக்கு சுயமரியாதை அதைவிட முக்கியம் என்று கூறி ஐயா வைகுண்டர் வழியில் மக்கள் இந்து மதத்திலிருந்து மாறாமல் முலைவரி சட்டத்தை எதிர்த்து

மக்களை போராட வைத்தார்.

ஐயன் காளி இதைவிட சிறப்பானவர்! இவர் புலையர் இனத்தில் பிறந்தாலும், எப்படியோ "களரி" பயிற்சி பெற்று அதில் மிக சிறந்து விளங்கியவர். மிகவும் உடல் வலிமையும் கொண்டவர். இவர்காலத்தில் கேரளா வந்த "விவேகானந்தர்" கேரளாவை "சாதி பைத்தியங்கள் வாழும் பைத்தியக்கார விடுதி" என்று சொல்லி விட்டு சென்றார்!

ஐயன் காளியின் களரி பயிற்சி காரணமாக, நாயர்கள், நம்பூதிரிகள் யாரும் வம்பு வைத்துக் கொள்ள மாட்டார்கள். "பெருங்கட்டுவிளை" என்ற கிராமத்தில் பிறந்த இவரை, இவரது போராட்ட முன்னெடுப்புகளின் காரணமாக எல்லோரும் "ஊர் பிள்ளை","மூத்த பிள்ளை" என்று பெருமையோடு அழைப்பார்கள். இவரது பல்வேறு போராட்டங்களுக்கு பிறகே 1928 இல் சட்டப்பூர்வமாக முலைவரி நீக்கப் பட்டது.

1891 இல் பிறந்த அம்பேத்காரைப் போலவே, புலையர் என்ற தாழ்ந்த சாதியில் பிறந்த ஐயன் காளி,

ஒருவகையில் அம்பேத்காருக்கும் ",முன்னோடி" என்றும் சொல்லலாம்! 1893 லேயே அம்பேத்கர் "கோட் சூட்" போடுவதை போல, எப்போதும் "செர்வானி" போன்ற ஒரு கோட், பட்டு அங்கவஸ்திரம், பட்டு சரிகையுடன் தலைப்பாகை, மணி கட்டிய இரட்டை மாட்டுவண்டியுடன் தலைப்பாகையுடன் வலம் வந்து பார்ப்பன நம்பூதிரிகளை வெறுப்பேற்றுவார்!

இத்தனை போராட்டங்களுக்கு முதல் வித்திட்ட ஐயா வைகுண்டரை இப்போது "விஷ்ணுவின் அம்சம்" என்று சொல்லிக் கொண்டு அவருக்கு கோவில் கட்டி எந்த பார்ப்பனரை எதிர்த்து போராட்டம் செய்தாரோ அந்த பார்ப்பனர்களைக் கொண்டே அந்த கோவிலுக்கு "குடமுழுக்கு விழா" எடுக்கின்றனர் சில நாடார்கள்! சென்னையில் மேற்கு முகப்பேரில் கூட ஐயா வைகுண்டர் கோயில் ஒன்றை பார்க்கலாம்!

இப்பொழுது புரிகிறதா "கடவுள் இல்லவே இல்லை" என்று அழுத்தம் திருத்தமாக "பெரியார்" ஏன் சொன்னார் என்று! இல்லை என்றால் இன்று ஒரு கூட்டம் அவருக்கும் கோயில் கட்டி பார்ப்பானை வைத்து குடமுழுக்கு செய்து கொண்டிருக்கும்!

**(தெரிந்த வரலாற்றின் தெரியாத பக்கங்கள்.**

**ஆசிரியர் : கிருஷ்ணவேல்).**



## யாருடா தேசபக்தன்?

நமது விடுதலைப்போரில் பங்கேற்று உயிர்த்தியாகம் செய்த 95300 தியாகிகளின் பெயர்கள், டெல்லி இந்தியா கேட் சுவற்றில் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றில்,

| | |
|---|---|
| முஸ்லீம்கள் | 61395 |
| சீக்கியர்கள் | 8050 |
| பிற்படுத்தப்பட்டோர் | 14480 |
| தலித் இனத்தவர் | 10777 |
| ஆதிவாசிகள் | 598 |
| சங்கிகள் | 0 |

இந்த நிலையில், அந்நேரம் ஆங்கிலேயரின் அடிவருடிகளாய் இருந்த வரலாறை மறந்து...முஸ்லீம்களின் தேசப்பற்றைப் பற்றி சில முண்டங்கள் இன்னமும் கேள்வி எழுப்புகின்றன.

### வயிறு எரியுது

வேதாந்தம் அனில் அகர்வாலுக்கும், பிரிட்டன் சென்ட்ரிகஸ் நிறுவனத்திற்கும் இந்தியாவின் மிகப்பெரிய சொத்தான பாரத் பெட்ரோலியத்தை அடிமாட்டு விலைக்கு பேசி முடித்துள்ளது மோடி அரசு.

ஒன்பது லட்சம் கோடி மதிப்புள்ள சொத்துக்களுடன், வருடத்திற்கு எட்டாயிரம் கோடி ரூபாய் லாபத்துடன், ராஜ நடை போட்டு கொண்டு இருந்த பாரத் பெட்ரோலிய நிறுவனத்தை, நலிந்த நிறுவன லிஸ்டில் சேர்த்து, வெறும் 75 ஆயிரம் கோடிக்கு தனியாருக்கு தூக்கி கொடுக்கிறது மோடி அரசு.

9 லட்சம் கோடி ரூபாய் சொத்தை, 8 லட்சம் கோடிக்கும் அதிகமான நஷ்டத்தில் வாரிக்கொடுக்கும் இந்த எட்டப்பன் கும்பலுக்கு மனசாட்சியே இல்லையா?

பாஜக கும்பலின் அப்பன் வீட்டு சொத்தா இருந்தால் இப்படி கீழ்தரமான விலைக்கு தேசத்தை விற்பார்களா என்ன?

தேசத்தின் சொத்துக்களை விற்கும் இந்த தேச விரோதிகள் தான் தேசத்தை காப்பாற்ற போகிறார்களாம்.

இது எல்லாம் தொடக்கம் தான்...!

முடிவு இன்னும் அபாயகரமானதாக இருக்கும். •

# சமற்கிருத செய்தித் திணிப்பு!

## ஆரியத்துவா ஆதிக்கம்

இந்திய அரசின் தமிழ்த் தொலைக்காட்சியான பொதிகைத் தொலைக்காட்சி உள்ளிட்ட அனைத்து மாநில மொழி தொலைக்காட்சிகளும் அன்றாடம் காலை 7.15 முதல் 7.30 வரை சமற்கிருத செய்தி அறிக்கையை கட்டாயம் ஒளிபரப்ப வேண்டும், ஒரு வேளை அந்த நேரத்தை ஒதுக்க முடியவில்லை என்றால் அடுத்த அரைமணி நேரத்திற்குள் 15 நிமிடத்தை சமற்கிருதச் செய்தி ஒளிபரப்பிற்காக ஒதுக்க வேண்டும் என்று இந்திய அரசின் பிரசார் பாரதி சுற்றறிக்கை அனுப்பி இருக்கிறது.

அதுமட்டுமின்றி ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 6 மணிக்கு ஒளிபரப்பாகும் சமற்கிருத வாராந்திர செய்தியை ஒளிபரப்ப வேண்டும் என்றும், அந்த குறிப் பிட்ட நேரம் வாய்க்கவில்லை என்றால் அந்த நாளுக்குள் நேரத்தை ஒதுக்கீடு செய்து அதனைக் கட்டாயம் ஒளிபரப்ப வேண்டும் என்றும் இந்த சுற்றறிக்கை கட்டளையிடுகிறது.

யாருக்கும் தாய்மொழி இல்லாத சமற்கிருதத்திற்கு நாள் தோறும் கால்மணிநேரம் செய்தி அறிக்கைக்காக ஒதுக்கீடு செய்வதும் வாரந்தோறும் ஒளிபரப்புவதுமே மிகையானது.

இப்போது அது போதாதென்று ஒவ்வொரு நாளும் கால்மணிநேரம் தமிழ் நிகழ்ச்சியை இரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாக சமற்கிருத செய்தியை ஒளிபரப்ப வேண்டும் என்பது சமற்கிருதத் திணிப்பு மட்டுமின்றி தமிழ் நீக்கமும் ஆகும்.

இந்தியா ஆரியத்துவா நாடுதான் என்பதை சமற்கிருதத் திணிப்பின் மூலம் மோகன் பகவத் - மோடி அரசு நிலைநிறுத்த விரும்புகிறது.

ஏற்கெனவே பல துறைகளில் சமற்கிருதத்தையும் இந்தியையும் திணித்து வருவதன் தொடர் நடவடிக்கை யாகவே இந்த சமற்கிருதத் திணிப்பு விளங்குகிறது. தமிழின ஒதுக்கலின் இன்னொரு நடவடிக்கையாகும் இது. தமிழினம் இதை ஒரு போதும் ஏற்காது.

இந்திய அரசின் செய்தி ஒளிபரப்புத் துறை இந்த சமற்கிருதத் திணிப்பு சுற்றறிக்கையை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்!




**கி. வெங்கட்ராமன்**

# அரசியல் வணிகமும் - வணிக அரசியலும்

ஆங்கிலப் புத்தாண்டு 2021 ஐயும் அடுத்து வரும் தமிழ்ப்புத்தாண்டு 2052 ( தை 1) ஐயும் வரவேற்போம்! கொரோனாக் கொடுநோய்ப் பாதிப்பும், முடக்கமும் இருந்தாலும் கடந்த ஆண்டு தமிழின விழிப்புணர்ச்சி, அடுத்த படிநிலை எழுச்சியாகவே பயணம் கண்டது.

ஆண்டின் தொடக்கத்தில், பிப்ரவரி 5 இல் உலகப்புகழ் பெற்ற தஞ்சைப் பெரியகோயில் குடமுழுக்கு நடந்தது. தமிழ் மந்திரங்களைத் தமிழ் ஓதுவா மூர்த்திகள் ஓத அக்குடமுழுக்கு நடைபெற வேண்டும் என்று சனவரி மாதமே முயற்சிகள் எடுத்தோம். அதற்காகத் தஞ்சைப் பெரியகோயில் உரிமை மீட்புக்குழு சார்பில், தஞ்சையில் கோரிக்கை மாநாடு நடத்தினோம். ஆன்மிகச் சான்றோர்கள் பங்கேற்றார்கள். மதுரை உயர் நீதி மன்றத்தில் வழக்கும் தொடுத்தோம். தமிழ் – சமற்கிருதம் இரண்டிலும் குடமுழுக்கு நடத்துவோம் என்று அரசு அறிவித்தது. ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு தஞ்சைப் பெருவுடையார் கோபுரக் கலசத்தில் தமிழ் ஓதுவார் குடம் கவிழ்த்துப் புனித நீர் ஊற்றி – குரலெடுத்து தமிழ் மந்திரம் சொன்னார்! நேரலையில் உலகமே பார்த்து மகிழ்ந்தது. அடுத்து கரூர் பசுபதீசுவரர் கோயில் குட முழுக்கிலும் தமிழ் மந்திரம் ஒலிக்க முயன்றோம்; வென்றோம். அனைத்துக் கோயில்களிலும் அன்றாடப் பூசையில் தமிழ் மந்திரங்கள் ஒலிக்கச் செய்ய இவ்வாண்டு மேலும் முயல்வோம்!

தன்னாட்சி அதிகாரம் – தனி அலுவலகம் – முழுநேர அதிகாரிகள் கொண்டதாகச் செயல்பட வேண்டிய காவிரி மேலாண்மை ஆணையத்தை மோடி அரசு ஏற்கெனவே முடக்கி வைத்திருந்தது. ஒப்புக்கு இருந்த ஓட்டைப் பல்லையும் பிடுங்கி, ஆணையத்தை நீராற்றல் துறையின் கீழ் சேர்த்தது. இதைக் கண்டித்துத் தமிழ்நாடு தழுவிய அளவில் கொரோனா முடக்கத்தில் பதாகை ஏந்தி அங்கங்கே அணிவகுத்தோம். அடுத்து, ஆரியத்துவா கல்விக் கொள்கை எதிர்ப்பு – தமிழ்நாட்டுத் தொழில், வணிகம், வேலைகள் தமிழர்களுக்கே – என்ற இரு முழக்கங்களை முன் வைத்து தமிழ்நாடு தழுவிய அளவில் இருமுனைப் போராட்டம் – வெகுமக்கள் ஆர்ப்பாட்டங்களாக – நடத்தினோம். இந்திய அரசு மற்றும் தனியார் துறை வேலைகளில் 90 விழுக்காடு வேலை தமிழர்களுக்கு வேண்டும். தமிழ்நாடு அரசுப் பணிகளில் 100 விழுக்காடு தமிழர்களுக்கு வேண்டும் என்பது நமது கோரிக்கை. இதற்காக பொன்மலை தொடர்வண்டி பணிமனை முன்பு ஒருவார மறியல் போராட்டம் நடத்தினோம். வெளியாருக்கு எதிரான ஒத்துழையாமை இயக்கம் – ஒரு மாதம் – தமிழ்நாட்டில் பரவலாக நடத்தினோம்.

வெளி மாநிலத்தவர்களை வேலைக்குச் சேர்க்காதீர்கள்; வெளி மாநிலத்தவர் நிறுவனங்களில் பொருள்கள் வாங்காதீர்கள்; அவர்களுக்கு நிலங்களை விற்காதீர்கள், இடங்களை வாடகைக்குக் கொடுக்காதீர்கள் என்ற வேண்டுகோளை மக்களிடம் வைத்தோம். ஒத்துழையாமைப் பரப்புரைக்கு மக்களிடம் பேராதரவு கிடைத்தது. வெளியாரைத் தடுத்திடும் – வெளியேற்றிடும் விழிப்புணர்ச்சி நம் போராட்டங்களால் – பரப்புரைகளால் பெருவளர்ச்சி கண்டுள்ளது.

காணொலிக் கருத்தரங்குகள், வலையொளி நேர்காணல்கள் பலவற்றை நடத்தினோம்; பங்கேற்றோம்! இவ்வாண்டின் தொடக்கத்திலிருந்தே ஆரியத்துவா ஆதிக்க நோக்கில் கொண்டு வரப்பட்ட குடியுரிமைச் சட்டத்திருத்தம் மக்கள் தொகைப் பதிவேடு இரண்டையும் எதிர்த்த போராட்டங்களில் பங்கேற்றோம். மோடி அரசு கொண்டுவந்துள்ள உழவர் ஒழிப்புச் சட்டங்கள் மூன்றையும் முறியடிக்கும் போராட்டங்களில் காவிரி உரிமை மீட்புக் குழுவுடன் இணைந்து பங்கேற்றோம். தமிழினத்தின் கொள்கலனாகத் தமிழ்த் தேசியப் பேரியக்கம் தன்னைக் கட்டமைத்து வருகிறது. தமிழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற வெகு மக்கள் இயக்கமாகத் தமிழ்த் தேசியப் பேரியக்கம் வளர்ந்து வருகிறது. புதிய புதிய கிளைகள் தொடங்கப்பட்டு வருகின்றன. பேரியக்க ஆதரவாளர்கள் தமிழ்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பெருகியுள்ளார்கள்.

இப்போது தமிழ்நாட்டில் 2021 சட்டப் பேரவைத் தேர்தலுக்காக கட்சிகள் காட்சிகள் நடத்திக் கொண்டுள்ளன. அமெரிக்காவைப் போல் ஐரோப்பாவைப் போல் இந்தியாவில் கட்சிகளும், கம்பெனிகளும் கைக்கோத்துச் செயல்படுகின்றன. கட்சிகள் அரசியல் வணிகம் செய்கின்றன. கம்பெனிகள் வணிக அரசியல் நடத்துகின்றன. காங்கிரசு – மிதவாத ஆரியத்துவா கட்சி, பா.ச.க – தீவிரவாத ஆரியத்துவா கட்சி! தி.மு.க., அ.இ.அ.தி.மு.க., கட்சிகளும் அவற்றின் கூட்டாளிகளும் மேற்படி இரு ஆரியத்துவா கட்சிகளுடனும் மாறி, மாறிக் கூட்டணி சேர்பவை.

ஆரியத்துவா கட்டுக்கோப்பிற்குள் வரையப்பட்டதுதான் இந்திய அரசமைப்புச் சட்டம். அதன் வரைவுக் குழுத் தலைவராக இருந்த அம்பேத்கர் அவர்களே, பின்னர் “என் கை, பேனாவைப் பிடித்திருந்தது; ஆனால் எழுதியவர்கள் அவர்கள்” என்று கூறினார். இந்திய அரசமைப்புச் சட்டத்தை அடியோடு மாற்றப் போகிறோம் என்று முழங்கிய கம்யூனிஸ்ட்டுக் கட்சிகளும் திமுகவும், இந்திய அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்கப் போராடுகிறோம் என்கின்றன. ‘தேர்தல் புரட்சியாளர்களின்’’ இந்தச் சீரழிவு ஆரியப்பிராமண – ஆரிய வைசிய ஆதிக்கவாதிகளுக்கு மேலும் துணிச்சல் கொடுக்கின்றது; அரசமைப்புச் சட்டத்தில் இருக்கின்ற துண்டு, துக்காணி உரிமைகளையும் அவர்கள் தொடர்ந்து பறிக்கிறார்கள்! தேர்தல் புரட்சியாளர்கள் “கோவணத்தையாவது விட்டு வையுங்கள்” என்று கெஞ்சுகின்றனர். எடப்பாடி போன்றவர்கள் “கோவணம் இல்லாத அம்மண அழகே அழகு” என்று கொஞ்சுகின்றனர். இந்த இரு தரப்பாருக்கும் இடையே உள்ள வேறுபாடு “இதையாவது கொடு; எதையாவது கொடு” என்பதே! ஆனால் அண்டிப்பிழைப்பதில் நேர்முகக் கங்காணிகள் இவர்கள்!

“தமிழர்களே, தனிமனித பலவீனத்தைத் தமிழ் இனத்தின் பலவீனமாக மாற்றிவிடாதீர்! அச்சம் உள்ளோர் ஒதுங்கி கொள்ளுங்கள்; அதை இனத்தில் பரப்பாதீர்! தமிழ்த்தேசியம் என்பது இன விடுதலைச் சொல்; இறையாண்மை மீட்புச் சொல்; வெகுமக்கள் எழுச்சிச் சொல்” என்று முழங்கி தி.பி. 2021 – 2052 ஐ வரவேற்போம்! அனைவருக்கும் 2021 – 2052 புத்தாண்டு வாழ்த்துகள்!

நன்றி : தமிழ்த்தேசியத் தமிழர் கண்ணோட்டம் 2021 சனவரி

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**

# தற்போது விற்பனையில்




**பெ. மணியரசன்** எழுதிய
பா.ச.க.
பாசிச எதிர்ப்பின் பாதை
விலை : ரூ. 35/-

**கி.வெங்கட்ராமன்** எழுதிய
கொரோனாவுக்கு
பின் மாற்று பாதை
விலை ரூ. 45/-




பன்மை வெளி

7ஆம் ஆண்டு
வெளியீடாக
புதுப்பொலிவுடன்
திருவள்ளுவர்
நாட்குறிப்பேடு
தி.பி 2052 (2021)
வெளிவந்துள்ளது!

21, முதல் தெரு, முதல் பிரிவு, கலைஞர் கருணாநிதி நகர், சென்னை - 78
மின்னஞ்சல் : panmaiveli@gmail.com / இணையம் : www.panmaiveli.com
பேச : 044 - 24742911 / 98408 48594

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.

# மகத்துவமான மருத்துவ நூல்கள் விற்பனைக்கு!




## பாப்புலர் பப்ளிகேஷன்ஸ்

**ISO - 9001 : 2008 தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம், சென்னை.**

சாய் சுவாதி ப்ளாட்ஸ், நக்கீரன் தெரு, மேற்குமாம்பலம், சென்னை -33

தொடர்புக்கு : 97875 55182 / 99523 35505